Phone No. 4502
விலை அணு ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (26—10—49) | வெளியீடு (27—10—49) | இதழ் 74

'பிராமணீயத்தை'க் கண்டிப்பது பிராமணர்களைக் கண்டிப்பதாகுமா ?

தாழ்வு மனப்பான்மையை உதறித் தள்ளச் சொல்வது வகுப்புத் துவேஷமா?

பதின்மூன்றுமாதங்கள் தாமதித்ததேன்?

(0)

"திராவிட நாடு" ஜாமீன் வழக்கில் நீதிபதிகளின் கேள்விமாரி

சென்னை, அக். 24—

"திராவிடநாடு" ஜாமீன வழககு இன்று சென்னை பிரதம • நீதிபதி, ஜஸ்டிஸ் பஞ்சாபிகேச சாஸ்திரி, ஜஸடிஸ. சநதிர ரெட்டி ஆகியோர்முன் இனறு விசாரணைககு எடுததுககொள்ளபபடடது.

இவ்வழக்கு 1948-ம்ஆண்டு முறையே ஏபரல 4-ம் தேதி 18-ம தேதி "திராவிடநாடு" இதழ்களில் வெளியாகியுள்ள கட்டுரைகளைப் பறறியதாகும இக் கட்டுரைகள் இநதிய பதத்ரிகைகள் (அவசரச்சடடம்) சடடப்படி வகுப்புத் துவேஷமூட்டககூடியவை எனபது அரசியலார் சாட்டியுள்ள குற்றச்சாட்டாகும.

விசாரணையினபோது ஷை கட்டுரைகளில் முதல் கட்டுரையில் காணபபடும் கருததுககள் எநதக குறிப்பிடட சமுதாயத்தையும்தாக்குவதாக தெரியவில்லை என்றும், செனனைகாஙகிரஸ் சட்டசபை கட்சியிலுள்ள ஒரு சில உறுப்பினர்களைகுறைகூறுவதாகவேயிருககிறது என்றும, இரணடாவது கட்டுரையில், சமுதாயத துறையிலும, மதத துறையிலும் விசேஷ சலுகைகளைப் பெற்றுவரும பிராமணீயததை நீக்கவேணடும என்று திராவிட சமுதாயததைககேடடுக்கொள்ளும விஷயமே பிரசுரிக்கப்படடிருக்கிறது என்றும், இக் கடடுரைபகுத்தறிவாராயச்சி முறையை அடிபபடையாககககொண்டது என்றும் நீதிபதி கூறினார்.

அரசியலார் சார்பில் அட்வோகேட் ஜனரல ராஜா அய்யரும், "திராவிடநாடு" ஆசிரியர் தோழர் சி. என். அணணுத்துரை அவர்கள் சார்பில வழககறிஞர்கள் தோழா துரைராஜ் அவர்களும தோழர் எப. ஜெகநாதன் அவாகளும ஆஜராயினா.

அட்வோகேட் ஜெனரல் வாதம்

சர்ககார் தரப்பில் அட்வோகேட் ஜெனரல் கூறியதாவது. ஆட்சேபிக்கப்பட்ட கட்டுரைகள் பிராமண சமூகத்தை தாக்கி எழுதப்பட்டவையல்ல என்று விண்ணப்பதாரரின் சார்பில் கூறும் கூற்று தவறு. கட்டுரைகள குறிப்பிடட கொள்கைகளையோ, நோக்கங்களையோ பிரதி பலிபபதாய் இருக்கலாம். ஆனால் அவைகளில் மிக முக்கியமாய் கவனிக்க வேண்டியது குறிப்பிட்ட கொள்கையைத் தெரிவிப்பதற்காக கையாளப்பட்டிருக்கும் சொற்கள, வேறு வேறு வகுப்புகளுககிடையில வெறுபபையும் விரோதத்தையும உணடு பண்ணுவதறகு உதவியதா என்பதே. பெசண்ட் வழககில், ப்ரீவி செளனசில, பததிரிகைச சடடததின 4-வது பிரிவின முழுப் பொருளை விளககமாக ஒழுஙகு படுத்திக கூறியுள்ளது. அநதத தீாபபின படி கவனிகக வேணடிய கருத்து. ஒரு கட்டுரை படிப்பதால படிபபவனுக்கு ஏறபடுகிற விளைவைப பொறுததுக கவனிகக வேண்டும எனபதாகும். என்னுடையக் கருத்துபபடி இநதக கட்டுரைகள ஒரு குறிபபிட்ட சமூகததிறகு எதிராக அதாவது பிரமண சமூகத்திற்கு எதிராக துவேஷத்துடன எழுதபபடடது என்று அபிபபிராயபபடுகிறேன. வகுப்பு துவேஷத்தை உண்டு பணணுகிற முறையில ஒருசமூகததை இழிகதுக குறறஞ் சாடடிக கூறுவதறகு எழுததாளருககு உரிமை உணடா எனபதே நம முனனுள்ளபிரச்சனை.

இநத நேரத்தில் பிரதம நீதிபதி அவர்கள கட்டுரைகளின போககு ஒரு குறிபபிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த பிராமண உறுப்பினர்களைத தாக்குவதாய உள்ளதே தவிர பிராமண சமூகம் முழுவதையும தாககுவதாய்த் தோனறவில்லையே எனறு குறிபபிடடார்.

அட்வகேட் ஜெனரல் தொடர்ந்து பேசுகையில் ஒரு குறிபபிட்ட அரசியல் கட்சியின் குறிபபிட்ட கோஷ்டியினரைத தாககுவதாய் அமைநதிருநதாலும் குறிப்பிடட சமூகம முழுவதின் பேரில் தான் துவேஷததை வளர்ககும்படியாய் உள்ளது. நான வற்புறுத்தி குறிபபிட விரும்புவது, குறிபபிட்ட அரசியல கட்சியில உள்ள கோஷ்டியாரைப் பற்றி எழுதப பட்டிருந்தாலும், அவர்கள் சமூகம பூராவின பேரிலும் துவேஷம கொளளும்படியானமுறையில் திட்டபபடடுள்ளது. மதிப்பறகுரிய நீதிபதிகள் கவனிகக வேணடியது அநத உறுப்பினர்களை கண்டிகக உபயோகிக்கப் பட்டிருககும மொழி, அதற்காக ஏறபடுததிக கொணட சந்தாப்பம, எழுததாளரின் அபிப்பிராயங்களைக கூறுவதற்காக எடுததுககொண்ட சமபவம் இவை

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

பர்மாவில் புத்தர் பிறக்கிறர் ?

அனைத்து பர்மா புத்த நெறி கழகத்தார், பர்மா சர்க்காரைக் கேட்டுக்கொண்டதறகு இணங்க, சர்க்கார் அலுவலக விருந்துகளில் மதுவகைகள வழங்குவதில்லை என்று பர்மா சாக்கா கட்டளை ஒன்று பிறப்பித்திருக்கிறது. ஆனல் ஒரு நிபந்தனை. வெளிநாட்டுக்காரர்கள் ஐம்பது நபருக்குமேல் கலந்துகொள்ளும் விருந்துகளில், மதுவிலக்கு கைவிடப்படுமாம். புத்தா போதனையை வெளிநாட்டார்களுக்காக விட்டுக்கொடுக்க முன்வரும் பர்மா சர்க்காரின் போக்கை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. மதுவருந்துதல் கூடாது என்ற புத்த தர்மத்தை மட்டும், அதுவும் அரைகுறையாக அமுல் நடத்த முன்வந்திருக்கும் பர்மா சர்க்கார், புத்தர் போதனையில் மிக மிக முக்கியமான 'அகிம்சாபரமோ தர்மத்தை'ப் புறக்கணித்து நடந்துவரக் காரணம் என்ன? மனித இரத்தம், தினம் தினம், பர்மா மண்ணில் காட்டாறுபோல் ஓடுவதை உடனடியாக நிறுத்துவதும், அதற்கான முறையில் செயலாற்றுவதும் புத்த தர்மத்திறகேப் புறம்பானது என்று கருதிக்கொண்டு இருக்கிறதா பர்மா சர்க்கார்? மதுவ "ந்துவதிலும் பிற இன்னுயிர் நீக்குவது தறைவான கொடுமைதான் என்று தீர்மானம் கொண்டிருக்கிறதா பர்மா சர்க்கார்?

மதுவை ஒழித்துக்கட்ட முனைந்துள்ள பாமா புத்தநெறிக் கழகத்தார், பர்மாவில் நாள் தோறும் நடைபெற்றுவரும் கொலைகளை உடனடியாகநிறுத்திவிடுமாறு பர்மாசர்க்காரைவேண்டிக்கொள்ளாததின் மர்மம் என்ன? அந்தக் கழகமும், மது வருந்துவதை, அதுவும் சர்க்கார் நடத்தும் விருந்துகளில்மட்டும் நிறுத்திவிட்டால், புத்த தர்மத்தை நிலைநாட்டிவிட்டதாகிவிடும் என்ற முடிவிற்கு வந்துவிட்டதா?

என்ன இருந்தாலும் பர்மாவும் இந்தியாவைபபோல் ஓர் ஆசியநாடு அல்லவா? இங்கு எந்த அளவிறகு ஆளவந்தார்கள். ஆட்சியின் பெயரால்காந்தியாரின் அஹிம்சா போதனையைக் கடைபிடித்து ஒழுகி வருகிறார்களோ, அதை அபபடியே பின்பற்றி பர்மா செயலாற்றவில்லை

ரா. சு. சே. சங்கம் - காங்கிரஸ் உறவாடும் படலம்

பாசிசத்துக்கும், வகுப்பு வாதத்துக்கும் இடந்தர வேண்டாம்

டில்லி மாகாண காங்கிரசார் அறிவுரை!

காங்கிரஸ் இந்துக்களின் ஸ்தாபனம், இந்து மதத்துக்கு ஆதரவு தேடுவதே அதன் நோக்கம, காங்கிரஸ் ஆட்சி மத சார்பற்ற ஆட்சி என்று சொல்லப்படுவது வெறும் கண்துடைப்பேயன்றி வேறில்லை எனறு நாட்டின் நல்லறிஞர் பலரும் அடிக்கடி சுட்டிக் காட்டி வருகின்றனா. ஆனல் இந்தக் குற்றசசாட்டுகளை யெல்லாம் மறுத்து பத்தினி வேஷம் போடுகிறது காங்கிரஸ் கட்சி. அப்படிச் செய்தும் அவர்களையும் அறியாமல் அடிக்கடி அந்த வேஷம் கலைந்து உண்மைவெளிப்பட்டு விடுகிறது. அண்மையில் காங்கிரஸ் கமிட்டி செய்துள்ள தீர்மானம் ஒன்றே இதற்குப் போதிய சான்றாகும். அந்தத் தீர்மானத்தில், ராஷ்ட்ரீயர்களும் காங்கிரசில் மெம்பராகச் சேரலாம் என்று கூறப்பட்டிருக்கிறது காந்தியார் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்தது என்று அரசியலாரால குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை, இங்ஙனம் காங்கிரசே கட்டித் தழுவுகிறதென்றால் காங்கிரசின் மதப் பற்று, பாசிச மனப்பான்மை ஆகியவற்றுக்கு வேறு எடுத்துக் காட்டு என்ன தேவை? காங்கிரசை இங்ஙனம் குறை கூறுவது கண்டு சிலர் நம்மீது சீறி விழக்கூடும். அப்படிப்பட்ட அன்பாகளுக்கு டில்லி மாகாண காங்கிரஸ் குழுவினர் அண்மையில்நிறைவேறறியிருக்கும்தீாமானம் ஒன்றை அப்படியே அர்ப்பணம் செய்ய விரும்புகிறோம்.

"ராஷ்ட்ரியர்களும் காங்கிரசில் உறுப்பினராகச் சேரலாம் என்று கூறும் தன் தீர்மானத்தில் காங்கிரஸ் காரியக்கமிட்டி தெரிவித்துள்ள கருத்து, செத்தொழியும் வகுப்பு வாதத்துக்குப் புத்துயிர் அளிப்பதாக இருக்கிறது"

என்று அத்தீர்மானம் தெரிவிக்கிறது. அது மட்டுமல்ல, மத சார்பற்ற சர்க்கார் என்று நம்மை காங்கிரஸ் அரசியலார் சொல்லும் அடிப்படை இலட்சியமே இதனல் சிதைக்கப்படுகிறது, என்பதையும் அத்தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது. எனவே, இனியேனும் காங்கிரஸ் அரசியலார் ராஷ்ட்ரீயரோடு உறவாடும் படலத்தைக் கைவிட்டு, நாட்டில் மத வெறியும் பாசிசமும் வளர இடந்தராமல் இருப்பார்களென்று நம்புகிறோம்.

யானல் ஆசியராடு என்றுசொல்லிக்கொளவதில் பொருத்தமிருக்க முடியாதல்லவா? அடேயப்பா! அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருப்பவர்கள் எங்கெந்த வகையில்தான் விளம்பரந் தேடிக்கொள்ளுவார்கள்! சொந்த விளம்பரம் பெறும் வித்தைகளிலே, பர்மாவின் மது ஒழிப்பு முடிவையும் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்!

அமெரிக்காவில் மோட்டார் சைக்கிள் உற்பத்தி

இவ்வாண்டில் முதல் 8 வாரங்களில் 4,231,000 மோட்டார் சைக்கில்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 208,000 மோட்டார் சைக்கில்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1948-ம் ஆண்டில் இதே கால அளவில் 1,000,000 மோட்டார் சைக்கில்களே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஆனல் 295,000 மோட்டார் சைக்கிள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வர்த்தக அறிக்கைப்படி 1948-ம் ஆண்டில், தனிப்பட்ட மனிதர்களின் வருவாய் 206000 மில்லியன் பவுன் என்று தெரியவருகிறது. இது 1947-ம் ஆண்டு தொகையை விட 9 சதவிகிதம் அதிகமாகும்.

மாலை மணி

சென்னை 26—10—49 புதன்கிழமை

அரசியல் 'ஞானஸ்நானம்'

அரசியல் வேறு மதம் வேறு என்று பிரித்துக் காணமுடியாத நிலையில், அரசியலில் மதத்தைக் கலந்து, மக்களுக்குள்ள மத நம்பிக்கையை, தம் அரசியல் நாடகத்திற்குசாதகமாக்கிக்கொண்டு, ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து, அதிகாரம் செய்துவரும் உயர்ந்த நிலை பெற்றது, காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று கூறுவது மிகையாகாது. சென்றநாள்நாட்டுவரலாறே இதற்கு எடுத்துக்காட்டு. முஸ்லிம் லீகின் தோற்றத்தையும், பாகிஸ்தான் பிரச்னை கடுவுற்றதின் உண்மையையும் விருப்பு வெறுப்பில்லாமல் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, காங்கிரஸ் மதப்போர்வையின் முழு உருவமும் தெரியாமல் இருக்க நியாயமில்லை. அரசியல் கோணத்தில் மட்டுமே உறுதியாக நின்று விடுதலைப் போரைக் காங்கிரஸ் நடத்திவந்திருக்குமானால், இந்துணைக்கண்டம் இரண்டு அரசாகவும் பிளவுபட்டிருக்காது; இன்று கிளம்பியுள்ள வேறு பல தீர்க்கமுடியாத சிக்கலான பிரச்னைகள் பலவும் அறவே தோன்றியும் இருக்காது, இதற்குப்பதிலாக மக்களும் மதக்கோட்பாடுகளை எந்த அளவில் பொதுவாழ்வில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளுவது பொறுத்தமானது என்ற சிறந்த அறிவும் பெற்றிருப்பர். அரசியல் மத பாகுபாடுகளையும் நன்கு உணர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்ளவும் பயின்றிருப்பர். அறிவியலும் வளர்ந்திருக்கும்; உள்ளமும் விரிந்திருக்கும். மதவெறிகொண்டு மக்களை வெறுக்கும் மாபாதகமும் நாட்டைவிட்டுத் தொலைந்திருக்கும். மக்கள் உண்ண்மையான மக்களாக மாறி இருப்பர்.

காங்கிரஸ்கட்சி மேற்கொண்ட விடுதலைப் பிரசாரத்தில் அரசியல் கருத்துக்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் இருந்துவந்திருக்கின்றன. இன்றும் இருந்து வருகின்றன—இனியும் இருந்தே தீரும்இன்றுநாட்டில்ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பலவற்றிற்கும் பொறுப்பேற்கவேண்டியது காங்கிரஸ் ஒன்றுதான். காங்கிரஸ் பரப்பிவிட்டத் தொத்துநோயின் உடனடியான பலன்தான் இன்று நாட்டில் நாம் காணும் கேடுகள் அனைத்தும். விடுதலைப் போர் வெற்றிபெற்ற உடனே, காங்கிரஸ் கட்சி தனக்கு மூடுவிழா செய்துகொண்டு இருக்கவேண்டும். அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து ஒரு நாட்டை மீட்கப் போராடும் ஒரு கட்சியில் பணமூட்டைகளும், இடம் பெறும், பைசா துட்டுகளும் இடம் பெறும் இது தான் இயல்பு. ஒரு தேசீய விடுதலை இயக்கத்தின் இலக்கணமும் இதுதான், ஒரு தேசீய இயக்கத்தின் முடிந்த குறிக்கோள் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து ஒரு நாட்டை மீட்பது தான். அந்தப் பணி தீர்ந்து விட்டதும், மேலும் முரண்பட்ட சக்திகள், அதாவது பிரபுவும் பஞ்சையும் ஒரு முகாமில்சேர்ந்து பணியாற்ற முடியாது, இரு சாராருக்கும், அவரவர்கள் நலபலன்கள் வெவ்வேறாக இருக்கும் காரணத்தால், மேற்கொள்ள வேண்டிய பணியிலும் வெவ்வேறான முறைகள் இடம் பெறுகின்றன, புளியேப்பக்காரரும் பசியேப்பக்காரரும் கூட்டாகப் பயிர் செய்ய முடியாது, அப்படிப் பயிர் செய்வதாக வைத்துக்கொண்டாலும், புளியேப்பக்காரரின் கை தான் மேலோங்கி இருக்கும், இந்த உறவு முறையில், தலை கீழாக இல்லையானாலும்,-சிறுகச் சிறுக மாற்றம் செய்வதற்கும், பொருள் படைத்தவர்கள் இணங்க மாட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் தலைவர்களாக இருப்பவர்களுக்கு, பசியேப்பக்காரர்களின் வாழ்வை பலியிட்டு புளியேப்பக்காரர்களின் நன்மைகளுக்குச் சலுகைக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டே தீரும். ஒரு ஸ்தாபனத்திலானாலும் சரி, ஒரு நாட்டிலானாலும் சரி' இந்த உறவு முறை நீடித்திருக்கும் வரையில் குழப்பமும் கொந்தளிப்புந்தான் உள்ளுக்குள்ளாக இருக்க முடியும். இத்தருணத்தில் மக்களாட்சி முறைகள் கைவிடப்பட்டு பாசீச முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டியது இன்றியமையாத நிலைமையாகி விடுகிறது, இதுதான் காங்கிரஸ் ஸ்தாபனத்தின்-மாகாண — மத்திய சர்க்காரின்— உண்மையானப் படப் பிடிப்பாகும். இந்த வளர்ச்சியை எதிர்பார்த்துத்தான், அரசியல் அறிஞர்கள் பலர், காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட வேண்டும்—அதன் பணி தீர்ந்துவிட்ட காரணத்தால்—என்று எடுத்துக் காட்டியுள்ளனர்.

இன்று காங்கிரஸ் ஸ்தாபனம் பணமூட்டைகளின் கோட்டமாக மட்டும் இருக்கவில்லை, மதவெறியர்களின் புகலிடமாகவும் வெளிப்படையாக மாறிவிட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்குள் பாசரை அமைக்க ஆர். எஸ். எஸ், சங்கத்துக்குக் காங்கிரஸ் உரிமை வழங்கி இருப்பறதற்குக் காரணம் தேவை; அறிவியல் விளக்கம் வேண்டும்.

> **"காங்கிரசில முதலாளிகளும் வகுப்புவாதிகளும் அதிக செல்வாக்குப் பெற்று வருவதாகவும், அவர்கள் புது அரசியல் திட்டத்தை உபயோகித்து இந்தியாவை பாசிஸ்டு நாடாகச் செய்து வருவார்கள் என்றும், சோஷலிஸ்டுகள் புகார் செய்வதிலும் ஓரளவு நியாயம் இருக்கிறது எனபதில் சந்தேகமில்லை"**

இவ்வாறு கூறிவிட்டு, **"தேவையான பாதுகாப்புகளை அளிக்கும் புது அரசியல் திட்டத்தை ஆதரிக்கும் இந்திய தேசீய காங்கிரசில்தான் முஸ்லிம்கள் சேரவேண்டும்"** என்று ஐதராபாத் உஸ்மானியா காலேஜ்பிரின்ஸ்பாலான டாக்டர் சையத் அப்துல்லத்திப், இரண்டாயிரம் முஸ்லிம்களுடன் காங்கிரசில் சேர்ந்து விட்டார் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

அப்துல்லத்தீபும், அவரைச் சார்ந்தவர்களும் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அரசியல் ஞான ஸ்தானம் பெறுவதில் நமக்கு மகிழ்ச்சியோ மனக்கசப்போ கிடையாது. இன்று நாடாளுவோரின்போக்கை நன்கு தெரிந்துகொண்டு இருக்கிறவர்களுக்கு, இந்த ஞான ஸ்நானப் படலம் ஏமாற்றத்தையோ எரிச்சலையோ கொடுத்துவிடக் கூடியதல்ல. பல நாளைக்கு முன்பே இந்தப் புனித முழுக்கை எதிர்பார்த்தது தான். டாக்டர் லத்தீபை நாம் பல காலமாகவே அறிந்திருக்கிறோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் பம்பரம் போல் சுழன்று வந்திருப்பதையும் அறிவோம்; எனவே இன்றுத் தலை சாய்ந்து போய்விட்டதைக் கண்டு நாம் வியப்படையவில்லை.

காங்கிரஸ் முதலாளிகள் முகாமாகிவிட்டது என்று சோஷலிஸ்டுகள் கூறுகிறார்களாம். இதில் 'ஓரளவு' நியாயமிருப்பதாகத் தான் டாக்டர் லத்தீப் ஏற்றுக் கொள்ளுகிறார்!

காங்கிரசில் வகுப்பு வாதிகள் செல்வாக்குப் பெற்று வருகிறார்கள் என்று சோஷலிஸ்டுகள் குற்றஞ் சாட்டுகிறார்களாம். இதனை யாவது டாக்டர் லதீப்மறுத்தாரா? இல்லை! இதிலும் 'ஓரளவு' நியாயம் இருக்கிறதாகவும் ஏற்றுக் கொள்ளுகிறார்!

இவர்கள் புது அரசியல் திட்டத்தை பயன் படுத்திக்கொண்டு பாசிஸ்ட் நாடாக்கி விடுவார்கள் என்று சோஷலிஸ்டுகள் சொல்லுகிறார்களாம். இதனையும் மறுக்கவில்லை டாக்டர்! இதிலும் ஓரளவு' உண்மை இருப்பதாக ஒத்துக் கொள்ளுகிறார்!

முதலாளிகள்—வகுப்பு வாதிகள்—நிரம்பியுள்ள பாசிஸ்ட் பாசறையாகி விட்டது காங்கிரஸ் என்பதை சோஷலிஸ்டுகள் எடுத்துக் காட்டின பின்னர்தான், பேராசியர் டாக்டர் லதீப் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் இன்றைய நிலையை அறிந்து கொண்டிருப்பார் என்று நம்மால் கருத முடியாது. அவர் பெற்றுள்ள கல்வி, அவரைக் கைவிட்டு விட்டிருந்தாலன்றி, சோஷலிஸ்டுகள் விளக்கிக் காட்டின பின்னர்தான், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உண்மை உருவத்தை அறிந்துகொண்டார் அவர் என்று சொல்ல முடியாது. நிற்க,

இந்த அரசியல் புனித முழுக்கால், முஸ்லிம் ஏழை சகோதாரர்களுக்கு. ஏற்பட இருக்கும் பலாபலன் என்ன? முஸ்லிம் தோழர்கள் மீது காங்கிரஸ் ஆளவந்தார்கள்கொண்டுள்ளமனக் கோளாறு நீங்க மார்க்கம் பிறக்குமா?-லதீபும் அவர் தோழர்களும் சேர்ந்து விட்டதாலேயே, காங்கிரசின் பாசீசப் பண்பாடு மாறி மக்களாட்சி மணம் பெற்றுவிடுமா? இதனல் நாட்டு முன்னேற்றத்திற்கு ஏதாவது புதிய நிலை உருவாகிவிடுமா? ஒன்றும் கிடையாது. இதனைத் தொடர்ந்து, அரசியல் ஞான ஸ்நானங்கள் சில நடைபெறக்கூடும், அருமையான அரசியல் நாடகம் பார்த்துக் களிக்கலாம்.

உலைக்கூடம்

['சம்மட்டி']

குற்றப்பரம்பரை!

இந்தப் பட்டியலில் பல பிற்பட்ட சமூகத்தினரை, வீர மரபினரை, ஆங்கில ஆட்சிப் பாவலைத் தடுத்தத் திண்மையாளர்களை, சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய தினசரி நடவடிக்கைகளைப் போலீஸ் பட்டாளமும் வெகுதடபுடலாகக் கண்காணித்துக்கொண்டு வருகிறது. ஆங்கில ஆட்சியினர் அருளிச்செய்த வரப்பிரசாதங்களில் இந்தக் 'குற்றப் பரம்பரை' என்ற சிறப்புப் பெயரும் ஒன்றாகும்!

ஒண்டவந்தப் பிடாரி ஊர்ப் பிடாரியைத் துறத்துகிறது என்பார்களே, அந்தக் கதைக்கு, இதைத்தான் நல்ல உதாரணமாகக் கூறலாம். ஏதோ அண்டிப் பிழைக்க வந்தவர்கள் ஆங்கிலேயர்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. இந்த நாட்டுச் செல்வத்தை சுரண்டவந்தவர்கள்தான் வெள்ளையர்கள் என்பதை வரலாறு எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கிறது.

நாராயண நாமாவளியைக் கூறினாலும், நமச்சிவாயன் நாமத்தை உச்சரித்தாலும், சக்தியைத் தோத்தரித்தாலும், பிரம்மனைப் பூஜித்தாலும், விநயகர் அகவலைக் கூறினாலும், திருப்புகழைப் பாடினாலும் இவ்வளவிலும் மறைந்துகிடக்கும் உண்மை ஒன்றுதானே! ஒன்றே ஒன்றுதானே! பக்தர்கள் நினைக்கிற படியெல்லாம் பாடினாலும், இந்த முரண்பாடானத் தோத்திரங்கள் எல்லாம், எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் ஒரே ஒரு தேவனைத் தானே குறித்துக்காட்டும் என்று 'சம்மட்டி'யார் எப்படி, தவறியாவது குறிப்பிடுவது என்று நீங்கள் அவசரப்பட்டுக் கோபித்துக்கொள்ளாதீர்கள்!

நான் சொல்லவந்தது அது அல்ல. விவிலியநூல், தராசு, துப்பாக்கி இவைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டுதான், இந்த நாட்டில் இறக்குமதியாயினர். தாதி இரு கை வீசி வந்தாலும், தாதி மனம் தலையில் உள்ள நீர்குடத்தின்மேல்தான் இருக்குமென்பாரே கவிஞர், அது போலத்தான் தங்கள் கைகளில் எந்த ஆயுதத்தைப் பிடித்துக் கொண்டிருந்தபோதிலும், வந்த வெள்ளையர்கள் மனத்தில், புகுந்த நாடுகளின் செல்வத்தை மூட்டைக் கட்டிக்கொண்டு பிறந்த வீட்டுக்குத் திரும்புவது என்ற கோட்பாடு தான் திருக்கோயில்கொண்டிருந்தது! மத போதகர்—வியாபாரி—போர் வீரர்—ஆகிய எந்த ஒரு பாத்திரத்தில் வெள்ளையர் தோன்றினாலும் அவர்களுக்கு மூலவிருப்பம் ஒன்றே ஒன்றுதான். கண்ணில் கண்டதைச் சுருட்டிக்கொண்டு கப்பலேறுவது தான்! இத்தகைய மனோபாவிகளைக் கோட்டும், பூட்டும், ஹாட்டும் போட்ட வெள்ளை நிற **குற்றப்பரம்பரையினர்** என்று கூறுவது முழுதும் பொருத்தமானது என்றுதான் 'சம்மட்டி'யார் தீர்மானிக்கிறார். இவர்களையும் குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் கொண்டுவந்து, நமது போலீஸ் இலாகா தினம் தினம் கண்காணித்து வருவது நல்லது! நல்லது தான்! வெள்ளையர்கள்தான் வெளியேறிவிட்டார்களே! இனி எப்படி அவர்களைக் கண்காணிப்பது!

நமது நாட்டைச் சுரண்டவந்த வெள்ளை பகல் கொள்ளைக்காரர்கள், அவர்கள் ஆக்கிரமிப்பை எதிர்த்தச் சந்ததியினருக்குச் சூட்டிய பழிச்சொல்தான் இந்தக் குற்றப்பரம்பரை என்பது! இந்த அபவாதத்திற்கு இந்நாட்டுவீரர்கள் ஆளானதற்குக் காரணம், அடிமை வாழ்வை வெறுத்து, அதனை எப்படுபட்டேனும் ஒழித்துக்கட்டப் போரிட்டுக் களத்தில் உயிர்விட்டு மானம் காத்ததுதான்!

'குற்றப்பரம்பரை' என்ற சொல்லே நமது காதுகளில் அது சமயம் அடிபடாமல்போய்விடுமல்லவா? அந்த நாளை மகிழ்ச்சிக்குரிய நாளாகத்தான் 'சம்மட்டி'யார் கொண்டாடுவார்!

'குற்றப்பரம்பரையினர்' என்றஒரு கூட்டம் இல்லாமல் ஒழிந்துவிடுமானல் நமது பாரத்'துக்கு பெருமை ஏது? 'பாரதமாதா' தன் கண்களைக் காட்டாற்றின் ஊற்றுக்கி விடமாட்டாளா? அவள் பெற்றெடுத்த அருமைத் தவப் புதல்வர்கள், அவள் கண்கள் குட்டையாவதைக் கண்டு சகிப்பார்களா?

தனிப்பட்ட ஒரு சமுகத்தினரை குற்றப்பரம்பரையினர் என்று சுட்டிக் காட்டினல், அவர்களின் பகையும் எதிர்ப்பும் கிளம்புமே என்று நினைந்துபோலும், தாங்கள் கட்சியினரையே குற்றப் பரம்பரையினராக மாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஏதோ காங்கிரஸ்காரர்கள்மீதுஉள்ள பொருமையினலும் துவேஷத்தினலுமே சம்மட்டி'யார் இவ்வாறு விஷமம் செய்கிறார் என்று தீர்மானித்துக் கொள்ளாதீர்கள்.

"The real black-marketeers connot be unknown to the party in power; many will be found among its supporters."

"அதிகாரத்தில் இருக்கிற கட்சியினருக்கு உண்மையான கள்ள மார்க்கெட்காரர்கள் தெரியாமலிருக்கக் காரணமில்லை; அவர்கள் ஆதரவாளர்களில் பலரை அப் பட்டியலில் காணக்கூடும்." இப்படிச் சுட்டிக் காட்டுகிறார், அந்தராமகிருஷ்ணனார்.

இந்தக் கள்ளமார்க்கெட்காரர்களைத்தான், ஆளவந்தார்களை ஆதரித்துக்கொண்டிருக்கும் 'பணம்பிடுங்கி'களுக்குத்தான் 'சம்மட்டி'யார்புதிய **'குற்றப் பரம்பரையினர்'** என்று புகழ்முடி புனைகிறார்! ஏன்? பொருத்தந்தானே?

இன்னும் சந்தேகம் இருந்தால் இதோபாருங்கள் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களைக் குறித்து ஒரு முன்னாள் காங்கிரஸ் பிரதமரே தீட்டிக்காட்டும் சித்திரத்தை!

"Threw all constitutional practices, principles, and decorum to winds."

'எல்லா அரசியல் ஏற்பாடு, தத்துவம் ஒழுங்குமுறை அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள்" சட்டசபை உறுப்பினர்கள் என்கிறார் கிழக்குப் பாஞ்சால முன்னாள் பிரதமர் பிம்சென்சசார். காங்கிரஸ் கட்சியில் இந்த உயர்ந்தப் பண்பாடுகள் எல்லாம் என்றும் இருந்ததில்லை என்பதுதான் சம்மட்டி'யாரின் திருத்தம்!

இரும்பு—உருக்கு பெர்மிட் விஷயமாக நடந்து இருக்கும் கள்ளமார்க்கெட்டு சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொண்ட அன்றையதினமே சட்டசபை உறுப்பினர்கள் ஆதரவும் பலமும் வேகமாகக் கரைந்துவர ஆரம்பித்துவிட்டதாம்! பிம்சென் சசார் கூறுகிறார், கிழக்குப் பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களைப் பார்த்து இவ்வாறு! இரும்பு பெர்மிட்டில் கள்ளமார்க்கெட் நடந்திருப்பதற்கும் சட்டசபை உறுப்பினருக்கும் இருக்கும் சம்மந்தா சம்மந்தம் சிதம்பர ரகசியம் — பிரம்மவித்தை! தத்துவசாஸ்திரிகளைத்தான் இதற்கும் தத்துவார்த்தம் சொல்லக் கேட்டுக்கொள்ளவேண்டும்!

இப்போது புரிகிறதா **புதிய குற்றப் பரம்பரையினர்'** யார் யார் என்பது? 'சம்மட்டி'யார் கூற்றல்ல இது! பிரபல தொழில் துறையினர், நன்கு பயிற்சிபெற்றுள்ள பிரதமர் காங்கிரஸ் கட்சியினருக்குத் தரும் சர்டிபிகேட் —இது! உங்கள் கோபத்தை அனுப்புங்கள் பார்சல் கட்டி, இவர்கள் முகவரிக்கு! தவறிவிடாதீர்கள்! மறந்துவிடாதீர்கள்!

ஏசலையும் பழியையும் எத்துணை நாட்களுக்குத் தாங்குவது?

சொந்த நாட்டில் சோறில்லை: வேதனை வெளிநாட்டில்!

தென்னாட்டுத் தொழில் சோர்வடைய வழிந்தோடிவருகிறது வடநாட்டு வாணிபம்!

அறியாமையை அகற்ற அறிவுப்படை திரட்டுவோம்

———(0)———

ஓமலூரில் அண்ணாத்துரை

[17-10-49 திங்கள் காலை ஓமலூரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கிளைக்கழகத் துவக்கவிழா வின்போது, தோழர் அண்ணாத்துரை ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

வடநாட்டு அகதிகளுக்கு இங்கே வரவேற்பு, வாழ்வு, வசதி எல்லாம். ஆனால் சிலோன், மலேயா, பர்மா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளிலே வாழும் தமிழ் மக்களுக்கு கொடுமை பல இழைக்கப்படுகின்றன.

இது முறையா? ஏன் இந்த இழி நிலை? எங்கள் கழகம் இன்னும் சிறிது நாட்களிலே, சுதந்திர முழக்கமிட்டு, மஞ்சள் பெட்டியின் மகத்துவம் பேசி ஓட்டு பெற்று, மக்களை ஆளும் மந்திரிகளைக் கேட்கத்தான் போகிறது.

"ஏ அரசாங்கமே! மக்களிடம் ஓட்டு பெற்று மந்திரியானோயே! தமிழ்நாட்டான் தவிக்கிறான் வேறு நாட்டில், வாழ வழியின்றி! அவன் வாழ்ந்த நாட்டிலே அவனுக்குச் சோறில்லை! ஆப்பிரிக்காவிலே அல்லல் படுகிறான்! அழைத்துவா அவர்களைத் திருப்பி! கூப்பிடு அவர்களை இங்கே! அனுப்பு கப்பலை அவர்களுக்கு! இங்கே வாழவகை, இடம் கொடு! உண்ண உணவு தா, ஏற்பாடு செய்! தொழில் கொடு! தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டிலுள்ள மானக்கேட்டை, மதிப்புக் குறைவை ஒழித்து விடு! உயர்வைத் தேடு!"

என்று கிளர்ச்சிகள், கூட்டங்கள் நடத்தத்தான் போகிறது" என்று தோழர் அண்ணாத்துரை ஓமலூர் திராவிட முன்னேற்றத் துவக்க விழாச் சொற்பொழிவிலே குறிப்பிட்டார்.

தோழர் அண்ணாத்துரை பேசியதாவது:—

"ஓமலூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா நடத்த என்னை அழைத்து, அமோகமான வரவேற்பு அளித்தமைக்குப் பெரிதும் உவகை கொள்கிறேன். நான் ஓமலூருக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் வந்திருக்கிறேன். மறுபடி உங்களை இன்று சந்திக்கும்போது, உங்களிடையே காணும் பேராதரவையும், உற்சாகத்தையும் கண்டு மிகவும் களிப்படைகிறேன்," என்று கூறிவிட்டுத் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க வேண்டியிருந்த நிர்ப்பந்த நிலையை விளக்கிப் பேசினார்.

மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"இன்று நாட்டிலே நானாவிதக் கட்சிகள் நடமாடுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொள்கையைக் கொண்டு பணிபுரிகின்றன, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷியலிஸ்டுக் கட்சி, இந்து மகாசபை, திராவிடர் கழகம் இவை போன்ற பற்பல கட்சிகள் இருக்கின்றனவே, ஏன் நாட்டிலே இன்னுமொரு புதுக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரால், உருவாகிற்று? என்ற ஐயப்பாடு, சந்தேகம், பலருக்குத் தோன்றலாம். சிலர் நையாண்டியும் கூடச் செய்யலாம். பலர் பழிக்கவும் செய்வர்.

ஒரேவொரு பரிகாரந்தானா?

ஒருவருக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. கடும் ஜுரம் என்றார் டாக்டர், மருத்துவர் என்ன செய்கிறார். காய்ச்சல் கண்டுவிட்டது, கடுமையான உஷ்ணத்தால் என்று, குளிர்ச்சிப்படுத்த மட்டும் மருந்து தந்தால் போதுமா? போதாது. காய்ச்சல் ஏன் வந்தது,? வந்ததற்குக் காரணம் என்ன? என்று கண்டறிகிறார். வைத்தியர். வயிறு கனத்திருக்கிறதா, அஜீர்ணம் கண்டிருக்கிறதா, கை கால் குடைச்சல், பிடிப்பு ஏற்பட்டிருக்கிறதா, கண் எரிச்சல் கொடுக்கிறதா, என்று பற்பல மூலகாரணங்களைக் கண்டறிந்து, அது அதற்கேற்ப, தைலமோ, சூரணமோ, கஷாயமோ தருகிறார், நாட்டு வைத்தியராக இருந்தால். ஆங்கில முறை தெரிந்தவராயிருந்தால், பற்பலதினுசு மருந்துகளைச் சோதித்துத் தருகிறார். அவசியமானால் ஊசி போடுகிறார். இவ்விதம் சாதாரண காய்ச்சலை நோய்க்கே செய்யப்படுகிறது என்றால், காலாகாலமாக, கருத்திழந்து. கதியிழந்து, நாதியற்றவராய வாழும் நாட்டு மக்களை நல்வழிப்படுத்த, நன்றாய் வாழவைக்க, ஒரே ஒரு பரிகார முறைதான் உண்டு என்று எப்படிக் கூறமுடியும்!

நோய் ஒன்றல்ல

மக்களுக்கிருக்கும் நோய் வெளிநாட்டு ஆதிக்கம் மட்டுமல்ல, மனநோயும் இருக்கிறது. அறியாமை, மூடநம்பிக்கை, பழமை, பகுத்தறிவின்மை முதலியன. மக்களை முன்னேற வொட்டாமல் முட்டுக்கட்டை போடுகின்றன. அவை நீங்க வேண்டும் நீக்கப்படவேண்டும். திறன் இருந்தும், திருந்திய மனப்போக்கு இல்லை. பாடுபடும் பண்பு இருந்தும், பகுத்தறிவு இல்லை. மூடநம்பிக்கையில் மூழ்கி, வாழ்வில் நம்பிக்கை இழந்து, சுயமரியாதைச் சிறிதுமின்றி மக்கள் வாழ்கின்றனர். தங்களை யுணர்ந்து தங்கள் நிலை தெரிந்து, தங்கள் நாட்டுப் பழக்கம், பண்பு முறை தெரிந்து, பகுத்தறிவோடு பணி புரிய மக்களைத் தயார் செய்து விடவேண்டும். அதுதான் சிறந்த வழி. விதியில் நம்பிக்கை வைத்து, வீணர்களாய் வாழக் கூடாது. 'அவன் விட்ட வழி நடக்கட்டும்' என்று அசட்டையுடன் இருத்தல் கூடவே கூடாது என்று கூறினோம். அறிவுப் பிரசாரம் புரிய வேண்டும், தெளிவு, சிந்திக்கும் திறன், செயலாற்றும் பண்பு பெற மக்களை அறிவுப்படையில் சேருகவென்று அழைப்பு விடுத்தோம்.

நெசவாளர் நிலை உயர வேண்டும்

வைத்தியர் எப்படி காய்ச்சலுள்ள நோயாளிக்கு அதன் மூலதாரத்தைக் கண்டுபிடித்து அதன் மூலபலத்தை முறியடித்தாரோ, அது போலவேதான், நாங்களும் நாட்டின் நலிவைப் போக்கிட வெள்ளையன் வெளியே போய்விட்டால் மட்டும் முடியாது, அறியாமை, தெளிவின்மை, மூடநம்பிக்கை, வாழ்வில் பற்றின்மை முதலிய வேறு பல நோய்களும் போகவேண்டும், போக்கப்பட வேண்டும். என்று கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக, நாட்டிலே சுயமரியாதைப் பிரசாரம் புரிந்தோம். பகுத்தறிவுப் பணிபுரிந்து வருகிறோம். நாமெங்கும் அறிவுப் படை திரட்டி வருகிறோம். அத்தகைய பணியை மேலும் தொடர்ந்து நடத்தவேதான் தி. மு. க, தோன்றியுள்ளது. நாட்டிலே இன்று கைத்தறி நெசவாளர் வேலையற்று வேதனை யடைந்துள்ளனர். சர்க்கார் அறிக்கைப்படி இன்று சுமார் மூன்று கோடிரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் விலை போகாமல் வாங்குவோரின்றி, கைத்தறித் துணி விற்கும் கூட்டுறவு சங்கங்களிலேயே தேங்கிக்கிடக்கின்றன. முடங்கிக்கிடக்கின்றன. எனவே அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் எத்துணை துயர் அடைவர். ஆலையிலே வேலை செய்யும் தொழிலாளி—அவன் மட்டும்தான் உழைக்கிறான் ஆலையில். ஆனால் கைத்தறி நெசவாளரோ, அப்படியன்று. அவன் ஒரு சேலை நெய்தாகவேண்டுமென்றால், அவன் குடும்பம் பூராவுமே உழைத்தாக வேண்டும் என்ற நிலை தான். [illegible] டிரும் சரி, ஆடவரும் சரி, முதியோரும், வாலிபரும் குழந்தைகளும்; கிழவர்களும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அத்துணைத் தோழர்களும் உழைத்துத்தான் ஆக வேண்டும். மார்க்கெட்டிலே கைத்தறி ஜவுளி முடங்கிக்கிடப்பதனால் எத்தனை அளவற்ற குடும்பங்கள் பூராவுமே வேலையற்று, வேதனையின் உருவங்களாகப், பட்டினியால் பதைபதைத்துக் கிடக்கும் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஏன் இந்த மந்த நிலை மார்க்கட்டிலே ஏற்பட்டது, ஏற்பட வேண்டும் என்று ஆராய்ந்து பாருங்கள். நாங்கள் கூறுகிறோம், இதற்குக் காரணம் நாட்டின் நோயிலே ஒன்றான வெள்ளையன் போனாலும், சீமை சென்றுவிட்டாலும் அது. மார்வாடி உருவிலே, வடநாட்டு வாணிபம் என்ற முறையிலே, தென்னாட்டை—திராவிடநாட்டைப் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அறியாமை, தெரியாமைமட்டுமல்ல, நாட்டிலே போக்கப்படவேண்டியவை. நாட்டின் செல்வத்தை. தொழில் வளத்தைப் பாதிக்கும், முறை, வகை, அது எந்த உருவில் வந்தாலும், சீமை ஆனாலும் சரி, செகந்திராபாத் ஆனாலும் சரி, ஆங்கில நாடானாலும் சரி, ஆமதாபாத் ஆனாலும் சரி, வெள்ளையன் ஆனாலும் சரி, விருதுகள் பெற்ற வட நாட்டு வாணிபமேயானாலும் சரி, அது எந்தப் போர்வையில், பகட்டான, உருவில் வந்தாலும் சரி, வரவிடக்கூடாது; வந்து நம்மை, நமது வாணிபத்தை, தொழில் வளத்தை, பொருளாதார நிலையை ஆதிக்கம் செலுத்தும்படி விட்டுவிடக்கூடாது, என்று கூறுகிறோம். இதனை மக்கள் நமது மாகாண மந்திரிகள் உணரவேண்டும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும், என்றும் எடுத்துக்காட்டுகிறோம்.

அணைபோட வேண்டும்

வடநாட்டு ஜவுளிக் ஜமீன் நானகணுவாகவும், தமிழ் நாட்டுக் கைத்தறி ஜவுளி நான்கரையணுவாகவும் விற்றால் மக்கள் எதை விரும்புவர், வறுமை நிலையில். வடநாட்டில் ஏற்கனவே செழித்து வளர்ந்து ஓ[illegible]யிருக்கும் வடநாட்டு வா[illegible]பத்தோடு, பணத்தோ[illegible] பெருத்த மூலதனத்தோ[illegible] போட்டியிட முடியாத நி[illegible]யிலே உள்ள தென்னா[illegible] சென்னை மாகாணம், த[illegible] வாணிபத்தைத், தொழி[illegible] வளத்தை எப்படிச் சீர்படு[illegible] முடியும்? செப்பனிட மு[illegible]யும் என்று யோசித்து[illegible] பாருங்கள். இதற்கு என[illegible] வழி, எப்படி இந்த நிலை[illegible] மாற்றியமைக்க முடியு[illegible] என்று யோசித்தால், அத[illegible] ஒரே ஒரு மார்க்கம், வளர்[illegible] வழிந்தோடிவரும் வடநாட்[illegible] வாணிபப் படையெடுப்பை[illegible] தடுத்து நிறுத்தி வைப்ப[illegible]யாகும். நமது நாட்டு வா[illegible]பத்தை வதை செய்யும் மு[illegible]யில் அது வளராமல் அ[illegible] போட வேண்டும். முளை[illegible] பயிரான நமது வாணிபத[illegible] வடநாட்டு வாணிப் வெ[illegible] வெள்ளம் அழித்துவிடாத[illegible] பாதுகாக்க வேண்டு[illegible] அதுவே முறை. முன்னா[illegible] வெள்ளையராட்சிக் காலத்தி[illegible] டாடா முதலிய வடநாட[illegible] முதலாளிகள் கூட அன்று [illegible]கள் தங்கள் வியாபாரத்திற[illegible] தொழில் வளத்திற்கு, சுதே[illegible] தேசியம் என்ற போர[illegible]யிலே, வெளிநாட்டு வா[illegible]பம் தம்முடையதைப்போட[illegible]யிட்டு அழித்து விடாத[illegible] பாதுகாப்புச் சுவர் எழு[illegible] கொண்டுதான் இன்ன[illegible] நிலைக்கு வளர்ந்தனர், வ[illegible] முடிந்தது. அதாவது வெ[illegible] நாட்டுப் பொருள் ஒன்[illegible] ஆறு ரூபாய்க்கு அங்[illegible] கிடைக்கிறது என்றால், அ[illegible] வகைப் பொருள் இங்கு எ[illegible] ரூபாய்க்குத் தான் விற்க மு[illegible]யும் என்ற நிலையிருந்தா[illegible] வெளிநாட்டுப் பொருளுக்[illegible] சுங்கம் விதித்து, அதாவ[illegible] அதிகப்படியான ஒரு ரூபா[illegible] வரியாக விதித்து வெளிநா[illegible]டுப் பொருளும் உள்நாட[illegible] விலைக்கே கிடைக்கும்படி செ[illegible]தனர். தங்கள் தொழிலுக்[illegible] பாதுகாப்புச் சுவர் (Tariff[illegible] எழுப்பிக் கொண்டனர்.

அதுபோலவேதான் இன்[illegible] வளர்ந்துவிட்ட வடநாட்[illegible] வாணிபம், இன்று மூலை[illegible] தெழும் நம் நாட்டு வாணி[illegible] பத்தை வ[illegible] அழித்து விடுவதைத் தடு[illegible] இன்று நமக்கு அதுபோன்[illegible] பாதுகாப்புச்சுவர் (Tariff) தேவை. மக்களிடம் ஓட்டு பெற்று மந்திரி வேலை பார்க்கும் மண்டலாதிபதிகள் இதைக் கவனிக்க வேண்டும்; கவனித்து செய்ய வேண்டும்.

இன்றைய தினம் மந்திரிகள் எதெற்கெடுத்தாலும் பணம் இல்லை, பணமில்லை என்று 'இல்லைப்பாட்டு' பாடுகிறார்கள். உள்ள நிலை[illegible] என்ன? உள்ளபடியே பண[illegible]மில்லையா? இருக்கிறது; நாம் பற்பல வழிகளி[illegible]லும் வரிப்பணமாக ஏராள[illegible]மாகக் கொடுத்திருக்கிறோம் அந்தப்பணம் எங்கே போ[illegible]யிற்று? இதில்தான் சூட்சம[illegible] அமைந்திருக்கிறது.

எதைச் செய்வர்?

இன்றைய ஆட்சி முறைப்படி, மாகாண சர்க்கார்களெல்லாம் பலமான மத்திய சர்க்[illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

...சலையும் பழியையும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

...த அடக்கம், ஒடுக்கம். ...ர்கள் ஆணையை மீற முடி...து. மீறககூடாது என்ற ...ட்டம். சட்டம் என்ற நிலை ...ட்டிலே, இன்று. நமது ...ாண சர்க்காருக்கு விற...னவரி, நிலவரி என்ற ...ரண்டு வரிகளே ஆதாரமாக ...ள்ளன. அதிக வருமானம் ...ரககூடிய தொழில வரிகளை ...ா, வருமான வரிகளையோ ...திகக முடியாது இவர் ...ால். நமது மாகாணத்திலே ...ருலாகும் வரிப்பணததிலே ...ரும்பகுதி மத்திய சாக்கா...கே போய்விடுகிறது. மிச்... மீதியுள்ள பணத்தை ...வத்துககொண்டு, மந்திரி...ள் மாதாமாதம் சம்பளம் ...தெதுக்கொள்ளுவதா? ஊர் ...றிவா அலவனஸ பெறு...? சட்டசபை உறுப்பினர் ...ருகு தாராளமாகத் தினப் ...தருவதா? உத்தியோகஸ் ...ர்களுககுச் சமபள உயர் ...பதா? நிர்வாகத்தை ...துவதா? நிலத்தைச் சீர ...த்த விவசாயிககு நிலவரி ...ா செய்வதா? பாதைகள் ...மைபபதா? பளளிகள ...டுவதா? எதைசசெய்வர்? ...கதுபுறை வீசுவத? ஆஸ...திரிகள் கட்டுவதா? எதைச் ...ய்வா? ,, துவும செயய முடி...த பரிதாப நிலைதான! இது ...டியிருககிற தென்றல், ...டின தலைவியான அமமை ...வீட்டிலே அபபம சுட்டு, ...லே முக்கால பங்கை ...று வீதியிலுள்ளவர்க்கு ...ழங்கிவிட்டு, மீதி கால ...கத்தைத் தன் கணவன், ...ைதைகட்கும பகிர்ந்து ...டு, தனக்கொன்றும் ...சசமோ, மீதியோ ...ல்லாமல், அப்பம தொட்ட ...கயிலுள்ள வாசனையை ...கர்ந்து பார்த்துத் திருப்தி...வதைப போல இருக்...றது.

...கதியான நிலை

இநதப் பெரும் பகுதிப் ...ணததில நமது மாகாணத்...றகு வேணடிய அத்திய...சிய செலவுகளுக்குப் பணம் ...வணடுமானல் மத்திய சாக்...ாருக்கு மனுப்போட்டு, ...ாவடி தூக்கி, அவர்கள ...ருணையை எதிர் நோக்கி ...ற்க வேண்டிய நிர்ககதியான ...லைதான நமது மாகாண மந்...திரிகட்கு. இநத மாற்ற ...வேணடும். மாகாண சுயாட்சி ...வெறும கேலிக் கூத்தாக மாறி...விடாதபடி, முழு அதிகாரத்...தையும பெறவேண்டும; நமது ...நாட்டுச் செல்வம் நமது நாட...டுககே பயன்பட வேண்டும; ...நமது மக்கள் குறைதீரத்தான ...செலவிடப்பட வேண்டும்; ...என்ற முறை, ஏற்பட்டுத் தீர ...வேணடும். இதற்காக நமது ...மககளும் மந்திரிகளும் பெரி...ய கிளர்ச்சிகள் நடததி ...நமது உரிமையை, செல்...வத்தை, தன்மானததை சுய...ஆட்சித் தத்துவத்தை அடைந்தாக வேணடும்.

...அவசர அரசியல் ஆருடம்

...இதிலே ஒரு குறைபாடு ...ணகிறதே என்று சிலர், ...றலாம, குறிப்பிடலாம. ...தாவது பலமான மத்திய ...ர்க்கார் வேண்டுமென்றுகூறு...வது எதற்காக. நாட்டை மாற...ரன் படையெடுப்பிலிருந்து ...ட்டித்தான், பாதுகாக்கத் தான், என்று சமாதானம் கூறப்பட்டுவிடுகிறது, மிக மிகச் சுலபமாக. இது தவறு அவசர அரசியல் ஆருடம் என்று தான் கூறுவேன். ஏன். என்றோ, எப்போதோ, எதற்காகவோ, எவ்விதமாகவோ ஏற்படக்கூடிய பகைவரின் படையெடுப்பைத் தவிர்க்க தடுக்க வேண்டி, இன்றிலிருந்தே நாம் நமது உரிமைகளை விட்டுக்கொடுததுவிட்டு வாடுவதா? வேதனைப்படுவதா? கூடாது! அப்படி ஒரு வேளை பகைவரின் படையெடுப்பு ஏற்படின் நாம் நமது பங்கை, நமது கடமையைக் கட்டாயம் செய்தேதீருவோம் அப்போது யாவரும் ஒருமிக்க நின்று போரிடுவோம், அதற்கான உடன்படிக்கை, ஏற்பாடு நிச்சயம் இன்றே செய்து கொள்வோம. படையெடுப்பு, படையெடுப்பு என்று சாக்குப் போக்குக கூறி இந்த நிலையிலேயே நாம இருந்துவிடக கூடாது. என்று மீண்டும் வலியுறுத்தி, இதனைச சிந்தித்துச் சீதூககிப பாரக்குமபடி உங்களை மிகவும் வேண்டுகிறேன்.

நமநாட்டிலே சாலையும. சோலையும் ஏராளம். நஞ்சைக்கும புஞ்சைக்குமகுறைவில்லை. நாடெஙகும கோட்டை கொததளங்கள், கோபுரங்கள். கோயிலகள், சத்திரங்கள், சாவடிகள் பூமிககடியிலே தங்கம, இரும்பு இன்னபிற என்ற நிலை. பின் ஏன் சென்றனர் கூலிகளாக வெளிநாடுகளுக்கு. அவர்கள் செல்லக் காரணம் நம்மிடையே இருந்த கண்மூடி வழக்கங்கள், சாதி பேதங்கள், சமய புராணங்கள் தாம் எனறு தைரியமாகக் கூறலாம்; ஏன? அவைதான் மக்கள் நிலையைப் பாழ்படுத்தி, மககள் சிநதனைத் திறனை மாயததது, விதி, ஆண்டவன செயல், பூர்வ ஜனம பலன், 'அன்றைக் கெழுதியவன் அழிததெழுதப போகிறுனு' 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' எனற பழமைப் பாட்டு பாடிக்கொண்டே இருக்கவைத்தன. ஏய்த்து ஒரு கூட்டம வாழவும, உழைப்பைப் பிறர் உறிஞ்ச, உழைககும் உழைப்பாளிகள் உள்ளம் நொந்திடவும், ஆன நிலைமை ஏற்பட்டது. இவைகளையெல்லாம மககளுக்குணர்த்திடவே தான் தோனறியுள்ளது திராவிட முன்னேறறக்கழகம்.

இன்னுமா அடிமை வாழ்வு?

நேற்றுவரை, இந்தியா சுதந்திரநாடாக மாறும்வரை, நமநாட்டு மக்களுக்கு, வெளிநாட்டிலே அனுதாபம் இருந்தது. ஆறுதல கூறினர், தேறுதல அளித்தனர். அடிமை நாட்டிலிருந்து வந்த அகதியென்று, பிறநாட்டான் கொடுமை தாங்காது நம்நாட்டுக்கு வநதவாகள், பிழைக்க, எனறு பரிதாபம கொண்டனா. ஆனல் இன்றோ நிலைமை மாறிவிட்டது, இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது. இப்போது நமமவர்' அவர்கள் கண்களில் படுவது, தெரிவது, தோன்றுவது, சுதந்திர நாட்டிலிருநது தமது நாட்டிற்கு வநது ஆதிக்கம புரிபவராக, தமது நாட்டுச செல்வத்தை வெளிககொணடு செல்வோராக, தமது நாட்டு உழைப்பை உதவாக்கரையாக்குவோராகத்தான் காட்சியளிக்கின்றனர் என்பதில் என்ன சந்தேகம்? "சுதந்திரம்தான் அடைந்துவிட்டதே உமது நாடு. போங்கள் ஊருக்கு, இங்கென்ன வேலை, எம்மை ஏய்த்திடவோ, அன்றி எம உழைப்பைப் பாழ்படுத்திடவோ, எமது செல்வத்தைப் பறித்திடவோ, எதற்கு இங்கே இன்னுமவேலை-தஙகுமிடம்?'' என்றுதானே கேட்பர், ஏசுவர், பழிப்பர்!

முன்கோபியாக இருந்தால்...?

நமது வீட்டுக் காளைமாடு கட்டவிழ்த்துக்கொண்டு ஓடுகிறது. அபபோது பக்கதது வீட்டுக்காரர், வழியேபோகிறவர் அதனைப் பாாத்துப் பரிதாபப்பட்டு, வழியிலே அதை மடக்கித் திருப்பி அதைநமது மாட்டுத் தொழுவிலே கட்டிடப் பெரிதும் உதவுகிறுர். அதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம். மறு நாள் மாடு கொட்டிலில்தான் அடங்கிக் கிடக்கிறது. ஆனலும, அடுத்த வீட்டுக்காரரை அழைத்து "ஐயா பெரியவரே கேளும். நேற்று எமக்குச் செய்த உதவியை நாம் என்றும மறவோம. இன்றும் உமது உதவி எமக்குத்தேவை. எழுநதிருந்து எமது கொட்டிலில உள்ள காளையைப் பிடித்துச் சென்று வயிரார மேய்த்துப் பினதிருப்பிககொண்டு வந்துகட்டும, அதற்காகஎமது நன்றி பெரிதும் உண்டு பெரியவரே'' என்று வேண்டினல், பெரியவர் 'சரி' என்பாரா? சற்று முன்கோபியாக இருப்பின், குத்துச்சண்டைதானே காட்சியளிககும். அத்தகைய நிலைதான் இன்றும் நமது மக்களை வெளிநாடுகளிலேயே விட்டுவைததிருப்பது! விளைவு அப்படித்தானே முடியும்!

புது எழுச்சி தேவை?

நாட்டுநிலை பழைமையின் பிடியிலிருந்து ஓரளவு மாறி வருகிறது. இது இன்னும் முனனேறவேணடும். உஙகள் கிளைக் கழகததில் தலைவர்கள் படத்தை மட்டும் மாட்டி மரியாதை செய்தால போதாது. பகுததறிவின் பழங்காவலர்களான அறிஞர் இங்கர்சால், வால்டேர், சாக்ரடீஸ்போன்றவர்களின் படத்தையும், கலீலியோ, தாமஸ் ஆல்வாஎடிசன் போன்ற விஞ்ஞானிகள், உலகமேதைகள், எழுத்தாளர்கள் படங்களையும்மாட்டி, மக்கள் முன் அவர்களை நிறுத்தி, அவர்கள் சரிதங்களை எடுத்துக் கூறி, புது எழுச்சியை, விழிப்பை ஊட்டவேண்டும.

இனியும் வேண்டாம் அந்த வீண் வேலை

பஞ்சாங்கத்திற்குப் பக்கத்தில அடலாசை வைத்துக காட்டுங்கள் இரண்டுககுமுள்ள பேதா பேதங்களை. உலகபபடத்தைக் காட்டி, இது ஆப்பிரிககா, இது அமெரிககா, இது ஐரோப்பா, இது ஆசியா, இது இநதியா என்று அகில உலகையும படத்தில காட்டி விட்டுப் பின் கேட்க வேணடும் "இதுதானப்பா உலகம! பார்த்து விட்டாய்! எங்கே உங்கள் புராணிகரைக கூப்பிட்டு, அதல சுதல பாதாளலோகங்களைக்காட்டச் சொல்லும் படம்போட்டு!'' என்று கேளுங்கள். அதே போ... இது பசிபிக் மகா சமுத்திரம், இது அட்லாண்டிக் மகா சமுததிரம் என்று சகல சமுத்திரங்களையும், கடல்களையும காட்டிவிட்டுக் கேளுங்கள். எங்கே உங்கள் பாறகடல் என்று. அதே போலவே, உங்கள் சந்தையன்று பூமியின் உலகப்படம் போட்டுப் பிரசாரம் செய்யுங்கள் அத்தகைய ஆக்க வேலைகளில் நீங்கள் ஈடுபட வேண்டுமேயன்றி, இனியும பெரியார் — மணி அம்மை இநத இருவரின் திருமணத்தால் ஏற்பட்ட வேறுபாடுகளை பெரிதாகக் கருதாமல, நாட்டு நிலைமையை முன்வைத்துப் பணிபுரிய வேண்டுகிறேன்.

இறுதியாக ஒன்று கூற விருமபுகிறேன. அதாவது, திராவிட முன்னேற்றக் கழகததினர், இன்று நாட்டில நிர்ககதியாக நிற்கும் கைத்தறி நெசவாளர் நிலையில் ஒரு மாற்றம் காண, அவாகளது குறைகளைத் தீர்த்திட அத்துறையில அனுபவம வாய்ந்த பெருமக்களை ஒன்றுகூட்டி, ஒரு மார்க்கம் காணபபெரிதும உழைககும் என்று உறுதிகூறி, அதோய திராவிட முன்னேற்றக் கழகத்தினா, கூடுமான வரை, பெரிதும கைத்தறி ஜவுளிகளையே வாங்கி, நம நாட்டு உழைப்பிற்கு ஊக்கமளிக்க வேண்டும், அது போன்றே மக்களும் ஆதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக கொண்டுஉங்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யறிதலைத தெரிவித்துக்கொள்கிறேன்.''

அங்கும் இங்கும்!

தோழர் ரெக்ஹாரிஸ் என்னும் உலக சைக்கிள் நிபுணர், 1938-ம் ஆண்டில், இத்தாலிய நிபுணர் ஒருவர் நிலைநாட்டிய உலக ரிகார்டைத் தகர்த்து விட்டார். 1000 மீட்டர் தூரத்தை 9-4/5 வினடியில்கடந்து உலகப் புகழ்பெற்ருர் மான்செஸ்டரைச் சேர்ந்த அந்த மனிதர். இது அங்கே—மேனட்டிலே!

"ஆறுமுகத் தத்துவம் என்பது எங்கும் நிறைந்துள்ள நித்தியமான தத்துவம். அதன் விசேஷத்தையும், மகிமையையும் ஒவ்வொருவரும் உள்ளத்தில் கொண்டு நடந்துவந்தால், உலகில் என்றென்றும் சாந்தி நிலவி நிற்கும். மாயை அடக்க அனைவரும் முயல வேண்டும்'' இது இங்கு— கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவர் ஆலயத்தில், திருப்புகழ்மணி தோழர் டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் நிகழ்த்திய உபதேசம்!

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஏறக்குறைய ஒரே காலத்தில் தான் நடந்திருக்கிறது. மேனட்டு மான்செஸ்டர் மணியின் சைக்கிள் வேகம், மனோவேகமாக ஓடப் பார்க்கிறது. இங்கு திருப்புகழ் மணிகளின் மனோவேகம், ஆறுமுகத்த த்துவத்தை மக்களுக்கு உபதேசிப்பதன் மூலம் மக்களை இன்னும் ஒரு நூற்றண்டுக்குப் பின்னல்இழுத்துச்செல்ல உபயோகப்படுகிறது.

இதுதான்மேனட்டவருக்கும் நமக்கும்உள்ள வேறுபாடு. "நாம் காலத்தை வெல்ல வேண்டும்; காலம் நம்மை வெல்லும்படி விடக் கூடாது'' என்றும் பேசியிருக்கிறுர் திருப்புகழ்மணி. ஆனல் செயலளவில் அவர் செய்திருப்பது காலக் கொலை! இங்ஙனம் இங்கு திருப்புகழ் மணிகள் காலக் கொலை செய்யும் இதேநேரத்தில்தான். மேனட்டு மான்செஸ்டர்மணி காலத்தை வெல்வது எப்படி? என்பதைச் செயலளவில்செய்து காண்பித்து உலகப் புகழ் பெற்றிருக்கிறுர்.

இங்கு திருப்புகழ் மணியார் உபன்யாசம் முடிந்ததும், திருக்கோவிலில் லட்சார்ச்சனை நடத்தப்பட்டது. அங்கு சைக்கிள் நிபுணர், சைக்கிள் ஓட்டி உலக ரிகார்டை தகர்த்ததும் லட்சக் கணக்கான மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இங்ஙனம் மேனட்டார்மனோ நிலைக்கும் நம் நாட்டார் மனோ நிலைக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை காணப்படும் போது, நாம் எங்ஙனம்? என்று முன்னேறுவது என்பதைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள்!

தீமை தரும் நாள்!

கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியான ஐஸ்டிஸ என். சி. சட்டர்ஜி அவர்கள் அணமையில் ஜயபபூர் வழிககறிஞர் கழகத்தில் பேசிய போது. "பிரிட்டிஷார் ஆட்சிமுறையில் நீதி வழங்கும் முறையில் சுதந்தரம் நிலவி வநதது. அதுவே பிரிட்டிஷாரின் நிர்வாகத் திறனை விளக்குவதாக இருந்தது. அந்தபபரமபரை பழககத்தை இந்திய வழககு மன்றங்களாவது, வழக்கறிஞா மன்றங்களாவது பலவீனப்படுத்திளுல்; அலலது கீழ் நிலைக்குக கொண்டு வநதால், அப்படிப்பட்ட நாள இந்தியாவுககு "தீமை தரும நாள்'' ஆகும என்று கூறியிருக்கிறுர்.

அமெரிக்காவில் செம்பு உற்பத்தி

அமெரிக்க ஐக்கிய நாடுகளின்சுரங்க ஸ்தாபன அறிக்கைப்படி 1948-ல் 834,913 டன்கள் எடையுள்ள செம்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்க இருப்புப் பாதைகள்

அமெரிக்க இருப்புப்பாதைச் சங்க அறிக்கையின்படி, 1949-ம் ஆண்டில் முதல் 7 மாத காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இரயில் வண்டிகளின் எண்ணிக்கை கடந்த 25 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டதை விட அதிகமாகும். 1949-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஆகஸ்டு மாதத்திற்குள், 1,157 புதிய இரெயில் வண்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 1,112 டீசல் எண்ணெய்யாலும், 45 நீராவியாலும் இயங்குவன. 60,486 வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன; ஆகஸ்டு முதல் தேதியன்று புதிதாக அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பவை 1009 இரெயில் வண்டிகளாகும். 980 டீசல், 25 நீராவி இயந்திரம், 4 மின்சார வண்டி மேற்கொண்டு புதிய வண்டிகள் 36, 654.

பிராமணீயத்தைக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களைக் கவனிக்க வேண்டும். கூட்டத்தினரால் "பிராமணர்கள் ஒழிக" என்று கூச்சலிட்ட சம்பவம் வகுப்பு துவேஷத்தைத் தூண்டும் முறையில் எழுதப்பட்டுள்ளது. 'பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் என்ற பிரச்சனையின் மீது நடந்த தேர்தல். பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் இருசக்திகளுக்கு மிடையே நடந்த போராட்டம்" என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதிபதி:—ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த சிலர் தங்கள் சேர்ந்திருக்கிற அரசியல் கட்சித் தேர்தல் நடந்துகொண்ட முறைக்காக கண்டிக்கப்படுகிறார்களென்றால் அது எப்படி அந்த சமூகத்தார் அனைவர் பேரிலும் துவேஷத்தை உண்டு பண்ணமுடியும்?

அட்வகேட்ஜெனரல்;-இந்த கட்டுரைகளில் உள்ளவை வகுப்பு அமைதியை குலைப்பதற்காகவே எழுதப்பட்டவை மாச்சரியத்தை விளைவிக்கக் கூடியவை அமைதிக்கு பங்கமளிக்கும் இந்தக்கட்டுரைகளில் இரண்டு அம்சங்கள் உள்ளன. "பார்ப்பனர் ஒழிக" என்ற கூச்சல் இருசமூகத்தின் சக்திகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைக் குறிப்பிடுவது. இப்பொழுது கவனிக்கப்பட வேண்டியது படிப்பவர் என்ன எண்ணிக் கொள்வார் என்பதே. "பார்ப்பனீயம்" என்ற கட்டுரை நோக்கத்தை இன்னும் தெளிவாய் விளக்குகிறது. பிராமணீயம் என்ற கோட்பாட்டிற்கும், அந்த கோட்பாட்டை பின்பற்றுகிறவர்களுக்கும் பிரித்துப் பார்க்கும்படியான வித்யாசம் இருக்க முடியாது.

பிரதம நீதிபதி:—தாங்கள் பின்பற்றும் மதத்தைப் பொறுத்தவரை பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் ஏதாவது வித்யாசங்கள் உண்டா? இரு சமூகங்களிலும் தங்கள் மதத்தின் சில அம்சங்களைக் கண்டிக்கும் மக்கள் இருக்கிறார்கள். சங்கரர் பிராமணீயத்தை புதுப்பித்தார், புத்த மதத்தை அழித்தார். "பிராமணீயம்" என்ற ஒன்றிற்கும் இந்த விஷயத்திற்கும் சம்பந்தமில்லை.

அட்வகேட் ஜெனரல்:—எல்லாம் "பிராமணீயம்" என்ற வார்த்தை என்ன பொருளில் இந்த கட்டுரையில் உபயோகப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்திருக்கிறது.

பிரதம நீதிபதி:-பிராமணீயம் என்பதுவேறு பிராமணர்கள் என்பதுவேறு. உள்ளப்படியே பிராமணீயத்தைப் பின்பற்றாத பல பிராமணர்கள் இருக்கிறார்கள்.

அட்வகேட் ஜெனரல்:—இவைகளுக்கிடையே வித்யாசத்தை வரையறுப்பது மிகக் கடினமானது.

நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரி:—கண்டனம் பிராமணீயத்தின் மேல் பொதுப்படையாக இருந்தால் அது வகுப்பு துவேஷத்தைத் தூண்டுவதல்ல, அல்லவா?

அட்வகேட் ஜெனரல்:—இது உபயோகித்துள்ள மொழியைப் பொறுத்தது.

பிரதம:—இந்தக் கட்டுரையின்படி அழிக்கப்பட வேண்டியது என்று கருதப்படுவது பிராமணீயம்.

"ஜாதி முறை" (Caste System) என்ற வார்த்தைகள் அங்கே பொருத்தப்பட்டிருந்தால் உங்கள் கருத்துப்படி ஆட்சேபனை கிடையாது அல்லவா?

அட்வகேட் ஜெனரல்:—இருக்கலாம். கட்டுரையில் பிராமணீயம்தான் கண்டிக்கப்பட்டிருக்கிறது; பிராமணர்கள் அல்ல என்பதற்கு விளக்கம் கிடையாது.

பிரதமநீதிபதி:—பிராமணர்கள் மட்டும் தான் பிராமணீயத்தைப் பின்பற்றுகிறார்களா என்பதைத்தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அட்வகேட் ஜெனரல்.—"பார்ப்பனீயம்" என்ற வார்த்தை கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது. 'பிராமண வகுப்பைக் குறிப்பிடுவதற்காக அந்த சந்தர்ப்பத்தில் பார்ப்பனீயம் என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகப் பொருள் செய்கிறேன்.

நீதிபதி பஞ்சாபிகேச சாஸ்திரி.—சில சமூகத்தார் தங்கள் தாழ்வு மனப்பான்மையை உதறித் தள்ளுவதற்காக வரைந்த விண்ணப்பம் என்று கருதுகிறேன்.

அட்வகேட் ஜெனரல்:—கட்டுரைகள் வகுப்பு துவேஷத்தை உண்டுபண்ணும் சூழ்நிலையை உண்டு பண்ணுவதாக இல்லையா என்பதைக் கவனிக்க வேண்டும்.

நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரி:—கட்டுரை 1948 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது 13 மாதங்களுக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தாமதத்திற்குக் காரணமென்ன?

அட்வகேட் ஜெனரல்:—தற்போது இந்த தாமதத்திற்கு காரணத்தைச் சொல்லும் நிலையில் இல்லை.

நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரி விண்ணப்பதாரரின் வகீல் தோழர் துரைராஜ் அவர்களை "பார்ப்பனீயம்" என்பதன் பொருள் என்ன என்று கேட்டார்.

தோழர் துரைராஜ் அவர்கள் கோர்ட் மொழி பெயர்ப்பாளர் "பிராமணீயம்" (Brahminism) என்று பொருள்படும் என்று மொழி பெயர்த்துள்ளார். அதன் அர்த்தம் என்ன இருந்தாலும் கட்டுரை "ஜாதிமுறை" யைக் கண்டிப்பதற்காக திராவிட மக்களை, தங்கள் தாழ்வு மனப்பான்மையை உதறி விட்டு, பிராமணர்கள் போல் சகல முறைகளிலும் முன்னேறத் தூண்டும்வேண்டுகோளாகும். இந்தக் கட்டுரைகளில் ஒரு சமூகத்தை இன்னொரு சமூகத்தின் மீது தூண்டி விடும் எந்த விஷயமும் கிடையாது. என்று பதில் கூறும் முறையில் வாதத்தை முடித்தார். நீதிபதிகள் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

தோழர், ஏ. துரைராஜ் அவர்களும் தோழர் பி. ஜகந்நாதன் அவர்களும், தோழர் அண்ணாதுரை அவர்கள் சார்பில் ஆஜராயினர். சர்க்கார் சார்பில் அட்வகேட் ஜனரல் ராஜா அய்யர் அவர்களும் அவருக்குத் துணையாக கே. வீராசாமியும் ஆஜராயினர். (ந. தி.)

இனி நடப்பவை

கடலூர் புதிபபட்டணம்— மஞ்சக்குப்பம மைதானத்தில் 28-10-49 வெள்ளியன்று மாலை 5-30 மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாக்கூட்டம் சிறப்பான முறையில் நடைபெறும். தோழர்கள் என் ஜீவரத்தினம், ஈ. வெ. கி. சம்பத், இரெ இளம்வழுதி ஆகியோர் பேசுவார்கள்.

* * *

கோவை— இர்கர திராவிட மாணவர் முன்னேற்றக்கழக அமைப்புக்கூட்டம் 21-10-49-ல நடைபெறாததால். 28-10-49 வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும் கொள்கையில் ஆர்வமுள்ள பள்ளி—கல்லூரி மாணவர்கள் கூட்டத்திற்கு வரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை புதுப்பேட்டை— 28-10-49 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு சைபுல் முல்க் தெரு 26-ம் எண்ணுள்ள 31 வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும் அதுபோது கழகச் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

விக்கிரமசிங்கபுரம்-இர்கர் திராவிடர் கழகக் கூட்டம் 30-10-49 ஞாயிறு அன்று செயலாளர் தோழர் சு கந்தசாமியின் இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும். அதுபோது திராவிடர் கழகத்தை திராவிடமுன்னேற்ற கழகமாகத்திருத்தி அமைக்க வேண்டியிருப்பதால் திராவிடர் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

மாப்பிள்ளையூரணி -இவ்வூர் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக மேற்படி கழக முக்கியஸ்தர் தோழர் ப முத்தையா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா 27 10-49ல் மாலை 4 மணிக்கு நடைபெறும் அதுபோது தோழர்கள் காதசமுத்து எஸ். வி. பாண்டியன் ஆகியோர் பேசுவார்கள்

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர், மாலைமணி

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்கள் தேவை.

(1) தச்சநல்லூர்.
(2) கீவளூர்
(3) முசிரி.
(4) திருமலைராயன் பட்டணம்
(5) செம்மனர்கோயில்.
(6) மங்கநல்லூர்.
(7) பாப்பா நாடு.
(8) நன்னிலம்
(9) ஜோலார் பேட்டை.
(10) பரங்கிபேட்டை.

துவக்கவிழாப் பொதுக் கூட்டங்கள்

சுண்டக்காமுத்தூர்

சுண்டக்கமுத்தூர். அக். 24— 23-10-49-ம் தேதி இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழா மிகச் சிறந்த முறையில் நடந்தேறியது மாலை 7-மணிக்கு வெளியூர்த் தோழர்களின் உதவி கொண்டு சிறந்த முறையிலே இயக்க முழக்கங்களை ஒலித்துக்கொண்டு, ஊர்வலமாகச்சென்றுக்கொண்டிருக்கையில், காங்கிரஸ்தோழர்களும, அவர்களின் ஆதரவாளர்களும் வழி மறித்து ஊர்வலத்தை ஊருக்குள் செல்லக்கூடாது என்று தடுத்தனர். மிரட்டினர், ஆவேசம கொள்ளும் முறையில் சொன்மாரி பொழிந்தனர், என்றாலும், நம் கழகத் தோழர்கள் கட்டுப்பாடாக அவர்களுக்கு அமைதி முறையில் சமாதானம் கூறி, ஊர்வலத்தை, மழை பெய்து கொண்டிருந்தும் மிக அமைதியான முறையிலே நடத்தி, தோழர் சு. ரா. ராமசாமி அவர்கள் திடலில் உள்ள திறந்த ஹாலில் விழா ஆரம்பமாயிற்று. விழாவிற்கு தோழர் சு. ரா. ராமசாமி தலைமை தாங்கினர். கோவை தோழர் எஸ். எ, இராசமாணிக்கம் முன்னின்று விழாவினைச் சிறப்புடன் நடத்தித் தந்தார்.

கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றுவதாக இருந்த கோபி தோழர் ஜி. என். இராஜு அவர்கள் எதிர்பாராத காரணத்தால் வந்து சேரவில்லை என்றாலும், கூட்டம் வெகு சிறப்பாகவே நடைபெற்றது இந்த ஊரிலே இதுபோன்ற ஊர்வலமும், கூட்டமும நடந்தேறியது இல்லை யாது என்று பொதுமக்கள் பேசிக் கொண்டனர்.

கூட்டத்தின் துவக்கத்தில்தோழர் கு. திருமூர்த்தி திராவிட பண்பாடி கூட்டத்தை மகிழ்வித்தார். தோழர் சு. கு. தாண்டவம், கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றி எடுத்துப் பேசிவிட்டு வந்திருந்த எல்லோரையும் வரவேற்றார். பிறகுகோவைதோழர் எஸ். எ. இராசமாணிக்கம், சு. கு. தாண்டவம். கு. திருமூர்த்தி, சி. ஜெ கிருஷ்ணன், ஆறுமுகம், இளங்கோவன், தண்டபாணி, முதலியோர்கள் கழகக் கொள்கைகளை வெகு அழகாக விளக்கிப்பேசினார்கள் தோழர் சு. கு. தாண்டவன் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிவுற்றது.

பிறகு தோழர் சு. ரா. ராமசாமி அவர்களால் வெளியூர்தோழர்களுக்கு தேனீர் விருந்து ஒன்று நடத்தப்பட்டது. (வி-உ)

கரியாப்பட்டணம்

கரியாப்பட்டணம், அக். 20— 16—10—49 மாலை 4 மணிக்கு கரியாப்பட்டணம் அஞ்சல நிலையத்திற்குத் தென்புறமுள்ள திடலில் கூட்டம் கூடியது. அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகக் கொடி, பட்டுக்கோட்டை இரெ. இளவரி அவர்களால் ஏற்பட்டது. கூட்டத்திற்கு தோழர் எஸ். ஜி. செல்லப்பா தலைமை வகித்தார். இரெ. இளவரி திராவிட முன்னேற்றக் கழக அமைப்பைப் பற்றியும், கொடியைப் பற்றியும், நாம் ஏன் பிரிந்தோம் என்பதையும். நாம் ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டுமென்றும் விரிவாகப் பேசினார்கள் (வி-உ)

சங்கரன்கோவில்

சங்கரன்கோவில், அக். 20— நேற்று மாலை 7 மணிக்கு இவ்வூர் திருவேங்கடம் சாலைத் தெருவில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா கோவில்பட்டி நகர சபைத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது

அவ்வமயம் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களும், அறுப்புக் கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களும், கடையநல்லூர் தோழர் கு திராவிடமணியவர்களும் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்கள் செயலாளர் நன்றி நவில இரவு 11 மணிக்கு விழா முடியுற்றது.

திருச்சேறை

திருச்சேறை, அக். 20— திருச்சேறை,கோவிலடியில் வண்ணத்தாள்களும்,கூர்தல்களும் ஓலைத் தோரணங்களாகக் காட்சி யளித்தவாறு, 19-10-49-ந் தேதி மாலை 6 மணிக்கு துவக்க விழாவிற்கு வந்திருந்தோர் மகிழ்வுற்று கூடியிருந்தனர். வரவேற்பு தட்டிகள், தலைவர்களை சாலையினின்று வரவேற்று நின்றன. தோழர் சம்பத், தோழர் எஸ். கே. சாமி ஆகியோர், மேடை நோக்கி வந்த பின்னர்; இன்னிசை முழங்க. தோழர் நாலூர், கே. முருகையன் தலைமை வகித்தார். கல்லூரி மாணவர், இளவழகன் தி. மு. கழகம் ஏன் உண்டாக்கப்பட்டது என்பதை சிறிது விளக்கிப் பேசிய பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தற்கால அரசியலில், நாம் அடையும் இன்னல்களைக் குறித்தும், ஒரு காலத்தில் சமதர்ம வீரரெனப் புகழப்பட்ட நேரு அவர்கள், இன்று அமெரிக்காவின் டாலர் வலையில் வீழ்ந்து சுயவிளம்பரப்பிரியராக மாறியிருப்பதைக் கண்டித்தும, தி. மு. கழகம் ஏன் கண்டோம் என்பதை விளக்கியும பெரியாருடன் மோதுதல், நம்முடைய குறிக்கோள் இல்லையென்றும், கொள்கைப் பணியை, என்றும போல் செய்யவே, உண்டாக்கினோம் என்றும் கூறி, சுமார் 1-30 மணி நேரம் பேசினர். பின்னர் தோழர் எஸ். கே. சாமி அவர்கள், திராவிடர்களின் நூல்களுக்கு சர்க்கார் தடை செய்து வருவதைக் கண்டித்தும், பகுத்தறிவுப் பிரசாரம் செய்யாமல், ஊர் ஊராகச் சென்று சீதாக் கலாட்சேபம நடத்தினால்தான் அரசாங்கம் அனுமதிக்கும என்ற நிலை இன்றைய காங்கிரஸ் மந்திரிகள் சட்டியந்திரனும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் பேசி முடித்தார். பின்னர் தோழர் அழகப்பா அவர்கள், திருச்சேறை தோழர்களின் 'கொள்கை பெரிது' என்ற நிலையை விளக்கிப் பேசினர். பின்னர் தோழர் வீ. சங்கரன் நன்றியறிதல் கூற, கூட்டம இரவு 9 மணிக்கு இனிது முடிவுற்றது. ஒலி பெருக்கி நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஏராளமான வெளியூர் தோழர்களும் வந்து சிறப்பித்தனர். (செ-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

28-10-49

கூடலூர்-புதுப்பட்டினம்:—என். ஜீவரத்தினம், ஈ. வெ. கி சம்பத், இரெ. இளம்வழுதி

வரிப்பணம் வடநாட்டுக்குக்காணிக்கை ஆகக்கூடாது

அடக்குமுறைகள் அனைத்தும் ஒழியவேண்டும்

காஞ்சிபுரத்தில் கழகத் தோழர்கள் முழக்கம்

மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழாவும் தி. மு. கழகத் துவக்க விழாவும்

காஞ்சிபுரம், அக். 24—

“வரி வசூலிப்பது ஒரு திறமை. வசூலித்த வரியை செலவிடுவது ஒரு திறமை. வசூலித்த பணம்—நமது நாட்டில வசூலித்த வரிப்பணம் நமக்கே பயனபடவேண்டும அது வடநாட்டிற்குக் காணிக்கையாகப் போகக்கூடாது. இதை வெட்கமின்றி மந்திரிகள் வெளியே எடுத்துக்கூறிடவேண்டும். அதை எடுத்துக்காட்டும எங்களுக்கும பேச வாய்ப்பிருக்கவேண்டும். எழுத வசதியும வேண்டும். வாய்ப்பூட்டு, புத்தகப் பறிமுதல, அச்சகத்திற்கு ஜாமீன் என்ற அக்கிரமங்கள், அடக்குமுறைகள் ஒழியவேண்டும்”

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரை திராவிட மறுமலர்ச்சிக் கழக இரண்டாவது ஆண்டுவிழா—திராவிட முன்னேற்றக் கழகத் திறப்பு விழா ஆகியவை காரணமாக காஞ்சிபுரத்தில் நேற்று மாலை நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

விழாக்களில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்த தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் அண்ணாத்துரை க. அன்பழகன், சி. டி. டி. அரசு ஏ ஆர். வெங்கட்டராமன் ஆகியோர் அனைவரும்வந்திருந்தனர். மக்கட் கூட்டம் அலைபோல் திரள் திரளாக வந்து கடல போல் தேங்கி நின்று விழா நடவடிக்கைகளைக் கண்டும் கேட்டும் களித்தார்கள்.

காலை முதற்கொண்டே வெளியிலிருந்தெல்லாம் தோழர்கள் வந்து காஞ்சியில் கூடி விட்டனர், தி. மு க. துவக்க விழா கண்டு களித்திட காஞ்சியைச் சுற்றியுள்ள பற்பல ஊர்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், மக்கள் வந்திருந்தனர். குறிப்பாக சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த, நகரி, புத்தூர், பொதட்டூர் புதுப் பேட்டை முதலிய தொலை தூரங்களிலிருந்துங்கூட பெருவாரியான தோழர்கள் வந்திருந்தனர். மேலும், வந்தவாசி, திருவத்திபுரம், வ. மாமண்டூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், குளும்பபடு, செங்கல்பட்டு, வாலஜாபாத், தக்கோலம், திருமால்பூர், காவேரிபாக்கம், அரக்கோணம், ஐயம்பேட்டை முதலிய இடங்களிலிருந்தெல்லாம் தோழர்கள் வந்து விழாவைச் சிறப்பித்தனர். மாலை 5 மணிக்கெல்லாம் விழா மிக அலங்காரமான பந்தலில் தொடங்கியது பாடல்கள் பாடப் பட்டன.

விழா திராவிட மறுமலர்ச்சிக் கழகத்தின் எதிரில் நடந்தது. அதன் நாற்புறமும் நீண்ட பெரிய வீதிகள் இருக்கின்றன. கண்ணுக் கெட்டிய தூரம்வரை மக்கள் குழுமி, ஆவலோடு விழாச் சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புற்றனர்.

கூட்டத்திற்கு தோழர் என். கே. ரங்கநாதன் அவர்கள் தலைமை வகித்தார். கழகக் காரியதரிசி தோழர் ஜி. எஸ். மணி அவர்களும், தலைவர் எம். பி. டி. மூர்த்தி அவர்களும் விழாவைச் சிறப்புற நடத்தப் பெருமுயற்சி செய்து பெருவெற்றியடைந்தனர்.

மேடைக்கருகில் பல முக்கியஸ்தர்களும், வியாபாரிகளும் அமர்ந்திருந்தனர் தோழர்கள், ஏ. கே. தங்கவேலர், புட்டாசாமி, ரத்தினம், டாக்டர் சிற்சபை, டபுள் யூ. கே. தேவராஜன், எம். வி. எம். பச்சையப்ப முதலியார், ஈழத்தடிகள், எஸ். எல்லப்பன், சஞ்சீவி, பொன்னுசாமி முதலியார். டாக்டர். ஜகதீசன், பானுமுதலியார், இராசரத்தினம், சென்னைத் தோழர் சி. ப. இராஜன், இராமசாமிமுதலியார், சின்னசாமிசெட்டியார், அரங்கண்ணல் சென்னை எம் எஸ். முத்து, கண்ணப்பிள்ளை, நடேசமுதலியார், நகரி. நடேசன், புதுப்பேட்டை என். கோபாலராஜன், புத்தூர் வேணுகோபால், திருநாவுக்கரசு, எஸ். வி. ராஜகோபால் ஆகியோர் வந்திருந்தனர் கூட்டத் தலைவர் கூட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். தோழர் A. R. வெங்கட்டராமன், கழக நிலையை விளக்கிவிட்டு, திராவிடர் கழகப் உடர்நிலைப்பள்ளி பென்றால் தி. மு. க. கலலூரி போன்றது என்று கூறினர்,

சி. டி. டி. அரசு

தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் பெரியாரோடு பணிபுரிந்து வந்தவர்கள் இன்று வேறு கழகத்தில் காட்சி யளிப்பது கருத்து வேறுபாட்டினால் அல்ல, ஆனல் கொள்கையின் மேல் கொண்ட விருப்பத்தினால் தான் என்று விளக்கிப் பேசினர்.

சத்தியவாணிமுத்து

பிறகு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசினர் அவர் தமது உரையில், பெரியார் கொள்கைகளை நாங்கள் வெறுக்கவில்லை. அவரையும் வெறுக்கவில்லை. ஆனல் அவரால், அவரது கொள்கைகட்கே இழுக்கு ஏற்படுத்திய காரியத்தைத்தான், செய்கையைத்தான் வெறுக்கிறோம் வேறு கழகமும் அமைத்தோம் என்று கழக நிலையை விளக்கிவிட்டு தி. மு. க. கொண்டுள்ள சிறந்த கொள்கைகளான, சமுதாய அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். இறுதியாகக் அவர் நாட்டிலே சர்க்கார் நடத்தும் அடக்குமுறை தர்பாரைக் கண்டித்தார் அதிலும் பெண்கள் மீதும் தாய்மார்கள் மீதும தடியடிப் பிரயோகம், கண்ணீர்புகை விடுதல் போன்ற செய்கைகளை சர்க்கார் இனியும் கடைபபிடித்தல் அறிவுடைமை அல்ல என்று அறிவுறுத்தினர்.

க. அன்பழகன்

பின்னர் தோழர் கே. அன்பழகன் அவர்கள பேசினர். அவரும் கழக நிலையைப்பற்றி ஆரம்பத்தில பேசிவிட்டு, அண்ணாவினுடைய சுய நலத்தின் விளைவல்ல, தி. மு. கழகம், ஆவேசத்தின் விளைவு—மக்கள் கொள்கையிடம் கொண்டுள்ள நீங்காப பற்றே காரணம என்று எடுத்துரைத்துவிட்டு, நாட்டின் தற்கால தேவைகளையும் பூர்த்தி செய்ப வல்ல கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று வலியுறுத்தி, அதன் கொள்கை. எடுத்து விளக்கி, விரிவாகப் பேசினர். அத்தகைய கழகத்திற்கு ஒரு இளைஞர், அதுவும் அண்ணாத்துரை போன்ற அறிஞர் பொதுச்செயலாளராக இருப்பது மிகவும் பொருத்தம். அவர் காட்டும் வழி நடவுங்கள் என்று விளக்கினர்.

அண்ணாத்துரை

கடைசியாகத் தோழர் அண்ணாதுரை பேசினர். அண்ணா மிக உருக்கமாகத் தாமும் தமமுடைய நண்பர்களும், மற்றும் பலலாயிரக்கணக்கான தோழர்களும திராவிடர் கழகம் என்ற முகாமைவிட்டு வேறு முகாமில வேலை செயவது, மகிழ்ச்சியோடு அல்ல, மனவருத்தத்தோடுதான் என்றாலும தாங்கள், நிகழ்ச்சியின் விளைவால், பெரியாரின திருமணத்தால் ஏற்பட்ட, கொள்கைக்கு நேர்ந்த, பழியைத் துடைக்கவேதான் இருக்கிறோம், வேலை செய்கிறோம் அவருக்கு விரோதமல்ல இக்கழகம். ஆக்கவேலை பல புரியும் என்று குறிப்பிட்டார். பின்னர் சர்க்கார் தம்மையும் பெரியாரையும் தொலைத்துவிட இப்பிளவைப் பயன்படுத்த முடியாது, ஏன் என்றால் இருவரும் இருகழகங்களும் பாடுபடுவது. பணிபுரிவது, ஒரு கொள்கைக்காக ஒரே கோட்பாட்டை நாட்டில் பரப்பத்தான், ஒரே குறிக்கோளை அடையும் எண்ணம் கொண்டவர்கள் தான், எனவே, எங்கள் இருவரையோ, அன்றி இரு கழகங்களையோ, பேதப்படுத்தி, பிளவு படுத்தி எம்மை ஒழிக்கத்திட்டமிட்டால் அது பலிக்கவே பலிக்காது' என வலியுறுத்தினர்.

சென்னை சர்க்கார் தமது பணத்தை, வரிப்பணத்தின் பெரும் பகுதியை வட நாட்டுக்குக் காணிக்கை செலுத்திவிட்டு விழிப்பதை அம்பலப் படுத்தி அத்தகைய போக்கு நிலை மாறவேண்டும் என்றும் எதிர்க்கட்சிகளை வளரவிட்டு, வகையாக ஆட்சி நடத்துங்கள் என்று அரசியலாருக்கு அறிவுரை வழங்கினர்.

இறுதியில் ஆட்சியாளர், பேச்சு, எழுத்து சுதந்திரங்களை பறிப்பது அடாதசெயல், அச்சகங்களுக்கு ஆயிரக்கணக்கில ஜாமீன் கேட்பது மனிததத்தன்மைக்கே மாறான போக்கு அதைவிட்டு விடுங்கள். இம்முறையில் எம்மை அடக்கிவிட முடியாது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் நல்லறிவுப் பிரசாரக் கழகமான, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒடுக்கிட முயற்சி செய்வது வீண் வேலை யென்றும் தனனை சர்க்கார் புத்தகங்கள் எழுதியதற்காக வழக்கு தொடுத்து சிறையிலடைக்க முயற்சிப்பதால் மட்டும் அறிவு ஊற்றை அடைத்துவிட முடியாது, இன்றும், அநேகர் அதைப்போல் கிளம்புவர் என எச்சரித்துவிட்டு, மேலும் பலப் பல விஷயங்களைக் குறித்துப் பேசி முடித்தார். கூட்டம் இரவு 9—மணிக்கு நன்றி கூறலுடன் இனிது முடிந்தது. கூட்ட முடிவில் மக்கள் மனமகிழ்ச்சியோடு தி. மு. கழகத்தைப் பாராட்டிப் பேசிக்கொண்டே சென்றனர்.

ஏன் இப்படி?

பண்டிதர் பதில் சொல்வாரா?

“இருதரப்பிலும் சேராமல் சுயேச்சையாக இருப்பதே இந்தியாவின் நோக்கம என்று கூறிய இந்திய முதலமைச்சர் நேரு இப்பொழுது இந்தியாவை அமெரிக்கா மேலும் சுரண்ட இடம கொடுக்கிறார்”

என்று அண்மையில் சோவியத் கம்யூனிஸ்டு பத்திரிகைகளான “இஸ்வெஸ்டியா” ‘பிராவ்டா’ ஆகிய பத்திரிகைகள் இடித்துக்கூறியுள்ளன. ஆனல் நமது பண்டிதர் “யாதும் ஊரே, யாவர்க்கும நான் விருந்தினனே” என்று பறைசாற்றி வருகிறார். அமெரிக்கா தன்னை அழைத்ததுபோலவே. ரஷியாவும் அழைக்குமானால் போகத்தயார் என்கிறார். மேலும, இந்தியாவுக்கு இன்றியமையாததேவைப்படும்கோதுமையைக் கொடுத்துதவும்படி கேட்கவே தான் அமெரிக்கா சென்றதாகக் கூறுகிறார். அது மட்டுமல்ல, அமெரிக்கா உலக அமைதியை நாடுகிறதாம். அமெரிக்காவின் இத்தகைய நல்ல நோக்கத்துக்கு ஆக்கந்தேடவேதான் அமெரிக்கா சென்றதாகவும் கூறுகிறார்.

ரொம்ப சரி; பண்டிதரின் பக்குவத்தை நாம் வரவேற்கிறோம் ஆனல் பண்டிதர் எதிர்பார்க்கும உலக அமைதியை நில நாட்டும நினைப்பும, ஆற்றலும் அமெரிக்கா ஒன்றினுக்கே உண்டு என்று பண்டிதர் கருதுவதுதான் நமக்கு ஆச்சர்யத்தையும் ஐயத்தையும விளைவிக்கிறது. ரஷியாவுக்கு அமைதியில் நாட்ட மில்லையா? அமைதியை நாடும உரிமையும், பண்பும அமெரிக்காவின் தனி உடமைகளா?

சரி, பண்டிதர் வாதப்படியே பார்ப்போம. “இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே அமெரிக்காவுக்குச் சென்றேன்” என்று கூறும் பண்டிதர், அமெரிக்கா தன்னுடைய எந்த தேவையைப்பூர்த்தி செய்து கொள்ள-எந்த பிரதி பலனை எதிர்பார்த்து இந்தியப்பிரதமரை அழைத்து இத்தனை விருந்துபசாரங்களையும் நடத்துகிறது. அவரது வருகைக குறித்து அக மகிழ்ந்து ஆரவாரம்செய்கிறது? ஏன் இப்படி? பதில் சொல்லுவாரா பண்டிதர்?

இதனைச் செய்வாரா இந்திய முதலமைச்சர்?

சென்ற வாரத்தில் அமெரிக்காவில் 15 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 10 பேருக்கு 5 ஆண்டு சிறைவாசமும், மற்றவர்களுக்கு மூன்றாண்டு சிறைவாசமும தண்டனையாகத் தரப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒவ்வொரு குற்றவாளியும 10,000 டாலர் அபராதம் செலுத்த வேண்டும் என்றும விதிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் கம்யூனிஸ்டுகள் தண்டிக்கப்படுவதற்குக் காரணம், அவர்கள் அமெரிக்க அரசியலைக் கவிழ்க்க சதி செய்ததே என்று சொல்லப்படுகிறது. அரசியலைக் கவிழ்க்கச் சதி செய்பவர் யாராயிருப்பினும் தண்டனைக் குரியவர்களேயாகும். கம்யூனிஸ்டுகள் மேற்கொள்ளும் சதி செயல்கள் நமக்கும் உடன்பாடல்ல. அதனை நாமும் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆனல், குற்றவாளிகள் எப்படிப்பட்ட குற்றத்தைச் செய்தவர்களாயினும அவர்களைத் தண்டிக்கும் விஷயத்தில், ஜனநாயக முறை கையாளப் படவேண்டும். அமெரிக்கா ஜனநாயகத்தின் உறைவிடம் என்று சொல்லப்படுகிறது. எனவே குற்றஞ்சாட்டப்படும கம்யூனிஸ்டுகள் ஜனநாயக முறைப்படி விசாரிக்கப்பட்டு தண்டனை தரப்படுவார்களென்று நம்புகிறோம். அமெரிக்காவில் நடைபெறும் இந்நிகழ்ச்சியை இவ்வளவு அக்கரையோடு ஏன் குறிப்பிடுகிறோமெனில், அங்கு கம்யூனிஸ்டுகள் என்னும் அரசியல் குற்றவாளிகள் தண்டிக்கப்படும் இதே நேரத்தில் தான், நமது இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் அந்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பவனி வந்து கொண்டிருக்கிறார்; காணாத காட்சிகளையெல்லாம் காண்கிறார், கற்காத பாடங்களையெல்லாம் கற்கிறார், பேசாத பேச்சுக்களையெல்லாம் பேசுகிறார். ஆகவே, அங்கு கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்படும் முறை; விசாரிக்கப்படும் விதம், அவர்களுக்குத் தரப்படும்தண்டனை, அதன் தாரதம்மியம் ஆகியவற்றையும் கண்டு, கேட்டு, தெளிந்துகொண்டு வருவார் நேரு என்று நம்புகிறோம்.

அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ளோர் அனைவருக்கும் ஆத்மார்த்த போதனை செய்துவிட்டுப் பதிலுக்குப் பண நாயகம் பற்றிப் பல விஷயங்களையும் அறிந்துவரும் இந்திய முதலமைச்சர் அவசியமாக எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அதாவது அமெரிக்காவின் கருத்துப்படி நீதியை நிர்வகிக்கும அமெரிக்க (Know how) முறையைச்செவ்வனே தெரிந்துகொண்டு வருவார் என்று எதிர்பார்க்கிறோம். நாம் எதிர்பார்ப்பதைச் செய்வாரா இந்திய முதலமைச்சர்?

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அபார நிவர்த்தி தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

பாதாமி லேகியம்

இரத்தவிருத்தி, தேகதிடம் உஷ்ணசாந்தி, நரம்பு பலம் இவைகட்கு புத்துயிரளித்து சிரந்தர தாதுபுஷ்டி தருவதில் நிகரற்ற சஞ்சீவி.

30 வேளை லேகியம் 5—0—0

P. S. R. பங்கஜம் வைத்தியசாலை பழனி. (S. I.)

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.